வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 08.04.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 124 | பக்கங்கள் : 16

# பஸிலிடம் இருந்து நாமலிடம் கைமாறியது கட்சித் தலைமை!

## பெரமுனவுக்குள்ளும் வலுக்கும் நெருக்கடி



கொழும்பு, ஏப்ரல் 08

பஸில் ராஜபக்ஷவின் ஏகபோக உரிமையாக இதுவரை காலமும் திகழ்ந்து வந்த சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையை நாமல் ராஜபக்ஷ கைப்பற்றி உள்ளார் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

15

## ஜனாதிபதி பதவி விலகினால் ஆதரவு வழங்க நாங்கள் தயார்

### அநுரகுமார சபையில் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 08

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கான தீர்வு திட்டத்துக்கு ஆதரவு வழங்க தயார்.”

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.



அத்துடன், ஜனாதிபதி பதவி விலகாமல், அரசால் முன்வைக்கப்படும் யோசனைகளை ஏற்பதற்கு

15

## நாணய நிதியத்திடம் செல்வதே ஒரே வழி

### அலி சப்ரி எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 08

தற்போதைய பிரச்னைக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது தான் ஒரே தீர்வு என முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஆனால் இதற்காக நிலையான அரசாங்கம் ஒன்று நாட்டில் இருக்க வேண்டுமெனவும், எனவே எதிர்க்கட்சிகள் முன்வந்து அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

## அரசியல் யாப்புக்கு முரணாக எந்த தீர்வும் வழங்கப்படாது!

### ஜோன்ஸ்டன் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 08

அரசியல் யாப்புக்கு முரணாக எந்தவிதமான தீர்வுகளும் வழங்கப்படாது என அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் நேற்று முற்பகல் உரை நிகழ்த்தியபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அரசியல் யாப்புக்கு உட்பட்ட விடயங்களையே ஜனாதிபதி முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்றில் பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் வகையிலான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தாமல், வெவ்வேறு பிரச்னைகள் குறித்து

15

## மத்திய வங்கிக்கு புதிய ஆளுநர்



கொழும்பு, ஏப். 08

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

15

## பாராளுமன்றம் சென்ற கோட்டாபய எதிராகவும் ஆதரவாகவும் கோஷம்!

கொழும்பு, ஏப். 08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ நேற்றுக் காலை பாராளுமன்றம் விஜயம் செய்து சிறிது நேரம் சபை அமர்வுகளை அவதானித்த பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தில் இரண்டாவது நாள் விவாதம் நேற்று இடம்பெற்ற நிலையில் ஜனாதிபதியின் பாராளுமன்ற வருகை அமைந்திருந்தது.

ஜனாதிபதியின் வருகையின்போது எதிரணி உறுப்பினர்கள் அவருக்கு எதிராக கோஷம் எழுப்பினர். அதேவேளை, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆதரவாக கோஷமிட்டனர்.

ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரி நாடெங்கும் போராட்டங்கள் தீவிரமடைந்து வரும் நிலையில் ஜனாதி

15

## ‘நானும் சுயாதீனம்’!

### அறிவிப்பு விடுத்தார் டிலான்



கொழும்பு, ஏப். 08

“வியத் மக பெயில் என்ற தகவலை நான்தான் முதலில் வெளியிட்டேன். அதனால் தான் ஓரங்கட்டப்பட்டேன்.” - என்று ஆளுங் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

“இந்த அரசில் இருந்தாலும் நான்

15

## ஜனாதிபதி நினைத்தால் எந் நேரமும் பதவி விலகலாம்

### கூறுகிறார் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஏப். 08

“ஜனாதிபதி விரும்பினால் அவருக்கு எந்நேரத்தில் வேண்டுமானாலும் பதவி விலக முடியும்.” - என்று தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

15



## ஆசிய - பசுபிக் நேட்டோவை உருவாக்க அமெரிக்கா முயற்சி

### சீனா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 08

அண்மையில். அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளுக்கிடையிலும் பாதுகாப்பு உடன்பாடொன்று மேற்கொள்ளப்பட்டது. ஓக்கஸ் என்றழைக்கப்படும், இந்த உடன்பாடு தொடர்பில் சீனா, அதன் அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றது. சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஸாவொ லியியான் அமெரிக்காவின் இந்த முயற்சியை ஆசிய-பசுபிக் நேட்டோ என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

2021 செப்ரெம்பரில், அமெரிக்கா, இங்கிலாந்து

15

## கொதிக்கின்றது இலங்கை!

### நியூசிலாந்து பிரதமர் சுட்டிக்காட்டு

வெலிங்டன், ஏப். 08

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் தொடர்வதால், இலங்கை முழுதும் கொந்தளிப்பான நிலையை அனுபவித்து வருகின்றதாக நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொற்றுநோயால் பொருளாதாரத் தவறுகள் அதிகரித்துள்ளன, இதன் விளைவாக பணவீக்கம் அதிகரித்து உணவு, எரிபொருள் மற்றும் மருத்துவப்

15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# நிறைவேற்று அதிகாரத்தை உடனடியாக நீக்கவேண்டும்

## கிரியெல்ல எம்.பி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 08

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் இரசாயன உரங்களுக்கு தடை விதித்தமையே என ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்க்கட்சி பிரதான கொறடா லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு ஒரே தீர்வு ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகார முறைமையை நீக்குவதேயாகும், 20ஆவது திருத்தச்சட்டத்தை இந்த அரசு நிறைவேற்றும்போது பாராளுமன்றுக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. ஆனால் தற்போது நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு தீர்வு பாராளுமன்றில் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகா ரத்தை நீக்கினால் நாங்கள் நாட்டு பிரச்னைக்கு தீர்வு வழங்குவதற்கு முன்வருவோம்-என்றார். (அ)

# இப்படியும் நடக்கிறது...!

இதுவரை ஜனாதிபதிகளாக இருந்தவர்களில் பலர் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரான கருத்துக்களுடன் இருந்தவர்கள்தான். ஆனால், தாம் ஜனாதிபதிகளாக ஆகியதும் - அந்த கதிரையில் அமர்ந்ததும், அதன் சுகத்தை இழக்க விரும்பாமல், தொடர்ந்து ஜனாதிபதிகளுக்குரிய அனைத்து அதிகாரங்களையும் அனுபவித்தார்கள்.

மைத்திரிபால சிறிசேன, அவர்களில் வித்தியாசமாக, தனக்கிருந்த அதிகாரங்களில் பலவற்றை பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் பிரதமருக்கு வழங்கினார். ஆனால், அவரே தனது பதவிக்காலத்தில் அதற்காக வருத்தப்படவும் நேர்ந்தது.

'ஆணைப் பெண்ணாக மாற்றும் அதிகாரத்தைத்தவிர, அனைத்து அதிகாரங்களும் தன்னிடமிருப்பதாக' இந்த ஜனாதிபதி முறையை நாட்டுக்கு கொண்டுவந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு தடவை சொன்னது ஞாபகத்திற்கு வருகின்றது.

அதனால்தான், அவர் தனது காலத்தில் மேன்மைதங்கிய ஜனாதிபதி என்று அழைப்பதற்கு பதிலாக, சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி என்று தன்னை அழைக்குமாறு அரச ஊடகங்களை பணித்திருந்தார்.

அவருக்குப் பின்னர் இதுகாலவரை, தாம் சுலபமாக வெற்றிபெறலாம் என்று நம்பியவர்களைத் தவிர மற்றையவர்கள் எல்லோருமே, தாம் பதவிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாமல் செய்வோம் என்று கூறிக்கொண்டிருந்தவர்கள்தான்.

ஆனால், அவ்வாறு கூறிய எவரும் பதவிக்கு வந்த பின்னர் அதனைச் செய்ய முன்வரவில்லை. காரணம் வேறு ஒன்றுமல்ல, அவர்களுக்கு கிடைத்த அந்த அதிகார சுகம்தான்.

இன்றைய அரசியல் சூழலில் ஆளும்தரப்பு - அதுதான், ராஜபக்ஷ தரப்பு அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவது என்பது நடக்கக்கூடிய காரியம் அல்ல என்பது எந்தக் குழந்தைப் பிள்ளைக்கும் தெரிந்த சங்கதிதான்.

அப்படியெனில், இன்று பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குத்தான் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது என்றே பரவலாக நம்பப்படுகின்றது.

அப்படியிருக்கையில், சஜித் பிரேமதாசா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில், ஜனாதிபதி முறைமையை அனைவருமாக சேர்ந்து இல்லாமல் செய்வோம் என்று அறைகூவல் விடுத்திருப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கலாம்.

கிடைக்கவிருக்கும் அதிகாரத்தையே மனுசன் வேண்டாம் என்று சொல்கிறாரே என்றே பலரும் முணுமுணுத்திருப்பார்கள். அவர் பாராளுமன்றில் இவ்வாறு கோரிக்கை விடுத்ததை அறிந்ததும், ஏன் இவ்வாறான ஒரு கோரிக்கையை விடுத்தார் என்பதை அறிய ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சி ஒன்றின் முக்கியஸ்தர் ஒருவருடன் பேசினேன்.

அவர் சொன்ன தகவல் ஆச்சரியமளித்தது.

அவர் என்னையே திரும்பிக் கேட்டார், "இன்று ஹரின் பெர்னாண்டோ ஒரு கோரிக்கையை விடுத்திருந்தாரே, கவனித்தீர்களா?"என்று.

"இதில் என்ன, ஹார்ஷா டி சில்வாவை ஆறுமாதங்களுக்கு ஜனாதிபதி ஆக்குங்கள். அவர் நாட்டின் இன்றைய பிரச்னைகளை தீர்த்து வைப்பார் என்று அவர் சொன்னதில் என்ன தவறு இருக்கின்றது. அவர் ஒரு பொருளியல் கலாநிதி. அவரால் பொருளாதார பிரச்னைக்கு தீர்வுகாணமுடியும் என்று சொல்வதில் என்ன இருக்கின்றது?" என்று அவரிடமே கேட்டேன்.

அவர் பொருளாதார கலாநிதி என்பதால் அவரால் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்றால், இதற்கு முன்னரும் நிதி அமைச்சிலும் மத்திய வங்கியிலும் பல பொருளியல் கலாநிதிகள் இருந்திகிறார்கள் தானே. அதுவல்ல, அவரது அறிவிப்பின் நோக்கம், சஜித்தைவிட, ஜனாதிபதி பதவிக்கு ஹார்ஷா டி சில்வாவே சிறந்தவர் என்பதை மறைமுகமாக சொல்லியிருக்கிறார்.

அவர், உண்மையிலேயே சஜித் அடுத்த ஜனாதிபதியாக வர விரும்பியிருந்தால், சஜித்திடம் கொடுத்துப் பாருங்கள், அவரிடம் பொருளியல் கலாநிதியான ஹார்ஷா இருக்கிறார். அவரது உதவியைப் பெற்று இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பார் என்றல்லவா கூறியிருக்கவேண்டும்?" என்றார் அந்த பிரமுகர்.

அவரது கூற்றுப்படி பார்த்தால் அதிலும் ஒரு பொருள் இருப்பதாகவே தெரிந்தது. ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் எதுவோ புகைந்துகொண்டுதான் இருக்கின்றது என்பதை அவரது பேச்சில் அறியக்கூடியதாக இருந்தது.

உடனே அவரிடம், "அப்படியெனில், ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித்தின் தலைமைக்கு எதிராகவும் சிலர் செயற்படுகிறார்களா?" என்று கேட்டேன். "இல்லை இல்லை, அப்படி ஒன்றும் இல்லை" என்றார்.

பங்காளிக்கட்சியை - அதுவும் எதிரணிக்கு தலைமை தாங்கும் ஒரு கட்சியை விட்டுக்கொடுக்கும் நிலையில் அவர் இல்லை.

அவர்கள் என்ன, நமது கூட்டமைப்பு போல, தமது பங்காளிக்கட்சிகளையே ஆளை ஆள் குறைசொல்லிக்கொண்டிருக்கக்கூடியவர்களா, என்ன?

- ஊர்க்குருவி

# மன்னாரில் இன்று கண்டன பேரணி

கொழும்பு, ஏப். 08

அரசாங்கத்துக்கு எதிராகவும் ,அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னாரில் மாபெரும் கண்டன போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்டன போராட்டம் காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் இடம்பெற உள்ளது.

சிவில் அமைப்புக்கள்,பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் மற்றும் இணைந்து இந்த கண்டன போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. (அ)

# லொறி-ஓட்டோ மோதியதில் ஒரே குடும்பத்தில் மூவர் பலி

தனமல்வில, ஏப்.08

தனமல்வில பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த பதுளை பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள அதேவேளைஇ விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ரொஷான் ரணசிங்கவின் வீட்டை தாக்கிய 8 பேருக்கும் பிணை

கொழும்பு, ஏப். 08

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் வீட்டை தாக்கி சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 8 பேரும் பிணையில் விடுதலை.

அவர்கள் நேற்று பொலனறுவை மேலதிக நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி எஸ்.கே.விக்ரமரத்ன முன் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் தலா 20,000 ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (அ)

# புலோலி கூட்டுறவுச் சங்கத்தின் பொன்விழா நாளை சனிக்கிழமை

வடமராட்சி, ஏப். 7

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன்விழா நாளை சனிக்கிழமை சங்க வளாகத்தின் கூட்டுறவு பெரியார் அமரர் செ.மாணிக்கவாசகர் நினைவு அரங்கில் சங்கத் தலைவர் வி.ஜி தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக வட மாகாண கூட்டுறவு ஆணைக்குழு செயலாளர் உமா தங்கவேல், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.சந்திர சேகரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், கரவெட்டிப் பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன், கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ச.குகபாலன், பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் ச.சர்வானந்தன், மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர் பி.விஜயமோகனராசா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வில் சிரேஷ்ட கூட்டுறவாளர்கள், மூத்த படைப்பாளர்கள் கௌரவிப்பும் பொன்விழா மலர் வெளியீடும் இடம்பெறும். (அ-2)

# தொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலைமை!

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளும் மூடப்படும் அபாயம் உள்ளதாக முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# மஹிந்தவின் ஆலோசனையுடன் விரைவில் புதிய அமைச்சரவை

கொழும்பு, ஏப். 08

புதிய அமைச்சரவையை நியமிப்பது குறித்து பிரதமருடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன் தினம் இரவு அலரிமாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலையில், இன்று புதிய அமைச்சரவை பொறுப்பேற்கவுள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

Eelanadu
07.04.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# புதிய அரசியல் யாப்பு கதைகள்?

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவந்தார். இதனடிப்படையில், தமிழ் அரசியல் சமூகத்தின் மத்தியில் அச்சம் ஏற்பட்டது. அதாவது, அரசியலமைப்பில் இருக்கின்ற, 13ஆவது திருத்தச்சட்டத்தையும் அவர்கள் இல்லாமலாக்கலாம் - என்னும் நியாய மான அச்சம் ஏற்பட்டது. இந்த பின்புலத்தில்தான், ஆறு கட்சிகள் இணைந்து, இந்திய பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதும் முயற்சிகள் இடம்பெற்றன. புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அரசாங்கம் பேசிவரும் நிலையில், நாங்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தை உயர்த்திப் பிடிப்பது சரியானதா? - நாங்கள் 1987இற்கு பின்னர் எவ்வளவோ தூரம் சென்றுவிட்டோமே! இப்போது எதற்காக 13 தொடர்பில் பேசவேண்டும்? இப்படியொரு வாதத்தை சுமந் திரன் முன்வைத்தார். பின்னர், அது, தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடானது. இறுதியில் சமஸ்டிடிப்படையிலான, வடக்கு கிழக்கு இணைந்த அரசியல் தீர்வுக்கான கோரிக்கையும் உள்வாங்கப்பட்டு, குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் சம்பந்தனும் சுமந்திரனும் நம்பிக்கையுடன் இருந்தனர். அப்போதும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அதிகம் விவாதிக்கப்பட்டது. ஏக்கிய ராஜ்ய - என் னும் சொல்லை முன்வைத்து சுமந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மல்லுக்கட்டிக் கொண்டனர். இறுதியில் புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் புஸ்வானமாகியது. இவர்களது வாதங்கள் விழலுக்கிறைத்த நீரானது. இன்றைய தென்னிலங்கை நிலைமைகள் கோட்டாபயவின் புதிய அரசியல் யாப்பு முயற்சிக்கும் முற்றுப்புள்ளியிட்டிருக்கின்றது. கோட்டபாய, அவரது, நன்மதிப்பை சிங்கள மக்கள் மத்தியில் இழந்துவிட்டார். அத்தோடு, அரசாங் கத்தின் பெரும்பாண்மையையும் இழந்துவிட்டார். இந்த நிலையில் மீளவும் புதிய அரசியல் யாப்பு முயற்சி புஸ்வானமாகியிருக்கின்றது.

இலங்கைத் தீவில் புதிய அரசியல் யாப்பு ஒரு போதுமே வெற்றியளிக்காதா? நடைபெறும் நிலைமைகளை உற்று நோக்கினால், ஒரு விடயம் வெள்ளிடை மலை. அதவாது, இலங்கைத் தீவில், அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவர முயற்சிப்பதானது - முயலில் கொம்பு தேடும் முயற்சிக்கு ஒப்பானது. சான் ஏற முழம் சறுக்கிய கதையாக - புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், தென்னிலங்கை ஏதோவொரு பிரச்னைக்குள் சிக்கிவிடுகின்றது. ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு அதன் இறுதி இலக்கை அடைந்துவிட்டதாக கூறிக்கொண்டிருந்த சூழலில், ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையிலான அதிகாரப் போட்டி தலைதூக்கியது. அத்துடன் புதிய அரசியல் யாப்பு கதையும் முடிவுக்கு வந்தது. இப்போது, கோட்டாபய அரசாங்கம் அதன் பொரும்பான்மையை இழந்துவிட்ட நிலையில், கோட்டாபயவின் புதிய அரசியல் யாப்பு கதையும் முடிவுக்கு வந்திருக்கின்றது.

எதிர்காலத்தில் புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண் டாலும்கூட, அவர்களும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப் போவதில்லை. ஒரு வேளை பேசினாலும் - அது நடைபெறப் போவதில்லை - ஏனெனில் அதற்குள் அவர்களது அரசாங்கம் ஆட்டம் கண்டுவிடும். இன்று, ராஜபக்ஷக்கள் வீட்டுக்கு போகவேண்டுமென்று கோசமெழுப்பும் எந்தவொரு தென்னி லங்கை அரசியல் கட்சிகளும், புத்திஜீவிகளும், தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. இனியும் ஆதரிக்கப் போவதில்லை.

இப்போது மீண்டும் எஞ்சியிருப்பது, அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டம் மட்டும்தான். அதிலுள்ள சில குறைபாடுகளை நீக்கி, ஆளு நரின் அதிகாரத்தை குறைத்து, மாகாண சபைகளை சுயாதீனமாகவும் வினைத்திறனுடனும் இயங்கச் செய்வதை தவிர வேறு வழியில்லை. அண் மையில் கூட்டமைப்பினரை சந்தித்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் - அரசாங்கத்தின் அரசியல் யாப்பு கதை களுக்குள் அகப்பட்டுக் கொள்ளாதீர்கள் - என்று கூட்டமைப்பினருக்கு அறிவுரை கூறியிருந்தார். ஆனால் இப்போது அதற்கு அவசியமில்லாமல் போய்விட்டது. இந்த விடயங்களிலிருந்து தமிழ் அரசியல் சமூகம் பாடங்களை படிக்க முயற் சிக்க வேண்டும். முக்கியமாக புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி வருகின்ற சட்டத்தரணி சுமந்திரன் போன்றவர்கள், சட்டக் கண்கொண்டு விடயங்களை நோக்காமல், அரசியலை அதன் சிக்கலான பக்கங்களின் ஊடாக, விளக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். புதிய அரசியல் யாப்பென்று கூறி-தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்ற அரசியலை செய்வதை விடுத்து, இருப்பதை உச்சமாக பயன்படுத்திக் கொள்ளவும், அதிலிருந்து முன்னோக்கி பயணிப்பதற்குமான வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். தமிழ் சிவில் சமூகம் என்று தங்களை கூறிக்கொள்வோரும், இந்த விடயங்களில், அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# திருச்சி அகதிகள் முகாமில் மரக்கன்று வளர்த்து விநியோகிக்கும் இலங்கைத் தமிழர்

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றதாக கைது செய்யப்பட்டு, திருச்சி சிறப்பு முகாமில் வைக்கப் பட்டுள்ள இலங்கைத் தமிழர் மகேந்திரன் மரக்கன்றுகள் வளர்த்தும் விதைகளை சேகரித்தும் அதிகாரிகள் முன்னிலையில் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

தமிழ்நாட்டில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்படும் வெளிநாட்டினர் திருச்சி மத் திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில், இலங் கைத் தமிழர்கள் 108 பேர் மற்றும் நைஜீரியா, பல்கேரியா, வங்கதேசம், இந்தோனேசியா உட்பட வெளி நாட்டினர் என மொத்தம் 148 பேர் தற்போது உள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை முடிந்து, விடுதலை செய்யப்படும் வரை சிறப்பு முகா மில் தங்க வைக்கப்படுவார்கள். சிறப்பு முகா மிற்குள் சமைத்து உண்ணும் வசதி, செல்போன் பயன்படுத்திக் கொள்ளும் வசதிகள் இவர் களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த 2014ஆம் ஆண்டு சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றதாக கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் மகேந்திரன் என்பவரும் திருச்சி சிறப்பு முகாமில் உள்ளார். சுமார் 8 ஆண்டுகளாக சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள மகேந் திரன், மரக் கன்றுகளை வளர்த்தும், மர விதை களை சேகரித்தும் தன்னார்வ அமைப்புகள், சுற் றுச் சூழல் ஆர்வலர்களிடம் வழங்கி வருகிறார்.

இதன்படி கடந்த 2019ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்தில் உள்ள தன்னார்வ அமைப்பிடம் 6 ஆயிரம் மரக் கன்றுகள், 5 ஆயிரம் விதை களை வழங்கினார். தொடர்ந்து விதைகளை சேகரித்தும் மரக்கன்றுகளை வளர்த்தும் வரும் அவர், அண்மையில், புங்கன், அத்தி, மா, புளியமரம், கொய்யா, வேம்பு, பாதாம் உள் ளிட்ட 1,500 மரக்கன்றுகளை வழங்கியுள்ளார்.

அதுமட்டுமின்றி சிறப்பு முகாம் வளாகத் தில் உள்ள புங்கன் மரங்களிலிருந்து சேகரிக் கப்பட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதை களையும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியர் ஜமுனாராணி, காவல் உதவி ஆணையர் பாஸ்கரன், வருவாய் ஆய்வாளர் ரவி ஆகியோர் முன்னிலையில் திருச்சி தண்ணீர் சுற்றுச்சூழல் அமைப்பின ரிடம் வழங்கினார்.

**பள்ளி, கல்லூரிகளுக்கு விநியோகம்**

மரக்கன்றுகளையும் விதைகளையும் பெற் றுக் கொண்ட பின்னர், தண்ணீர் அமைப்பின் செயல் தலைவர் கே.சி.நீலமேகம் பிபிசி தமிழிடம் கூறுகையில், "சிறப்பு முகாமில் உள்ள மகேந்திரன் இரண்டாவது முறையாக மரக் கன்றுகளை எங்களிடம் வழங்கியுள்ளார். இதில், பெருமளவு குளிர்ச்சி தரும் புங்கன் மரக்கன்றுகளாக உள்ளன. இயற்கை மற்றும் சூழல் மீதான அவரது ஆர்வத்தை ஊக்குவிக் கும், வகையில், கடந்த முறை மரக்கன்று



களைப் பெற்றுக் கொண்ட பின்னர், மரக் கன்று களை வளர்க்கும் பைகளை வழங்கினோம். அவற்றிலும் பொருட்கள் வாங்கி வரும் பிளாஸ் டிக் பைகளில் செடிகளை வளர்த்துள்ளார்.

மரக் கன்றுகளை முடிந்த வரை வளர்க்கும் அவர், விதைகளையும் சேகரித்து வழங்கியுள் ளார். இந்த விதைகளைக் கொண்டு விதைப் பந்துகளை உருவாக்க உள்ளோம். தற்போது வழங்கியுள்ள மரக்கன்றுகளை கல்லூரி, பள்ளி களுக்கும், பொதுமக்களுக்கும் இலவசமாக கொடுக்க உள்ளோம்." என்று நீலமேகம் தெரிவித்தார்.

சிறப்பு முகாம் எனும் சிறையில் அடைக்கப் பட்டிருந்தாலும் தான் உருவாக்கிய மரக்கன்று கள் பல்வேறு இடங்களில் நடப்படுகின்றன. குடும்பத்தினரை விட்டு பிரிந்து வாழும் தனக்கு இது மட்டுமே ஆறுதலாக இருக்கிறது என்கிறார் மகேந்திரன்.

அவர் கூறுகையில், "கஜா புயலினால் பெரு மளவு மரங்கள் விழுந்தன. இதை ஈடு செய்ய என்னால் இயன்ற பணிகளை செய்யலாம் என்று முயற்சிக்கிறேன். சிறப்பு முகாமில் இருக்கும் எனது நேரத்தை மரக் கன்றுகள் வளர்க்கும் பணியில் செலவிடுகிறேன்.

என்னை சந்திக்க வருவோர் அளிக்கக்கூடிய பழங்களிலுள்ள விதைகள், முகாம் வளாகத் தில் உள்ள மரங்களில் இருந்து விழும் விதை களை சேகரித்து மரக்கன்றுகள் நட்டு வளர்த்து வருகிறேன். இதை அதிகாரிகள் வழியாக பொதுமக்கள் மற்றும் தன்னார்வ அமைப்பு களுக்கு இலவசமாக கொடுத்து வருகிறேன்.

தற்போது வரை 30 ஆயிரத்திற்கும் மேற் பட்ட மரக் கன்றுகளும் சுமார் 5 லட்சம் விதைகளையும் கொடுத்துள்ளேன். சிறப்பு முகாமில் இருந்து விடுதலை ஆகிய பிறகும் இந்த பணிகளைத் தொடர்வேன்," என்கிறார்.

அதேநேரத்தில் "என் மீதான வழக்கு முடிந் தும் தன்னை விடுதலை செய்யவில்லை. இத னால் 8 ஆண்டுகளாக சிறப்பு முகாம் எனும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி சிறப்பு முகாமிலேயே அடைத்து வைத்துள்ளனர். உறவினர், குடும் பத்தினரை காண முடியாமல் தவித்து வருகிறேன்.

பல முறை அறவழிப் போராட்டங்களை நடத்தியும் பயன் இல்லை. ஆகையால், என்னு டைய மரக்கன்றுகளாவது வெளியில் வளர்ந்து சுதந்திர காற்றை சுவாசிக்கட்டும்." என்கிறார் மகேந்திரன்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
தந்தை வழி உறவினர் இடையே இருந்த மன வருத்தம் நீங்கும்.நண்பர், உறவினர் இடையே நெருக்கம் கூடும். உற்சாகமான நாள்.புதியவர்களை நம்பி புதிய பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம்.

**இடபம்**
நீங்கள் முயன்ற விஷயங்கள் விரைவாக நடைபெறும்.சிலருக்கு பணியில் ஏமாற்றம் வந்து உடனே சரியாகும்.குடும்ப முன்னேற்றம் ஏற்படும். பயம் நீங்கும்.

**மிதுனம்**
பணியாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வரலாம். திருப்தி அளிக்காத செயலில் ஈடுபட வேண்டாம். பொறுமை தேவை. கொடுக்கல், வாங்கலில் உள்ள மந்த நிலை நீங்கும்.

**கடகம்**
குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும். கவர்ச்சி அம்சம் கூடும்.பணியிடப் பிரச்சினை அகலும். சலிப்பு நீங்கி நிம்மதி வரும்.குடும்ப உறவுகளில் முன்னேற்றம் ஏற்படும். யோகம் கூடும்.

**சிம்மம்**
இதுவரை தடையாக இருந்த செயல்கள் விரைவாக நடைபெறும்.சமீபத்தில் குழந்தைகளால் ஏற்பட்ட மனஅழுத்தம் அகலும். எதிர்பாராத நல்ல விஷயம் ஒன்று நடைபெறும்.

**கன்னி**
குடும்பத்தினருக்கு புதிய ஆடை, நகை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள்.பணி சம்பந்தமாக வெளிநாட்டில் இருந்து அழைப்பு வரலாம். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கலகலப்பான நாள்.

**துலாம்**
எதிர்பாலினத்தினரால் ஏற்பட்ட பிரச்சினை ஒன்று தீரும். திட்டமிட்ட செயல்களை நன்கு செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
நாளின் முற்பாதியில் செலவும், பிற்பாதியில் நிதி நிலையும் உயரும். பிறருடன் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டி நாள். செலவு குறையும்.அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் உண்டு.

**தனுசு**
குழந்தைகளால் ஏற்பட்ட பிரச்சினை அவர்களாலேயே தீரும்.பாராட்டு கிடைக்கும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.பணியாளர் சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் வரலாம்.

**மகரம்**
வாகனம் வாங்கும் முயற்சி உங்களின் விருப்பப்படி நிறைவேறும்.எதிர்பார்த்த செய்தி வரும். நிம்மதி அதிகரிக்கும். தாய், சகோதரர்களுக்கு உங்களால் நன்மை ஏற்படும்.

**கும்பம்**
குடும்பத்தினருக்கு உங்களால் சிறு சிறு நன்மைகள் ஏற்படும்.புதிய முயற்சிகளின் மூலம் லாபம் கிடைக்கும். கவலைகள் நீங்கும்.எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது.

**மீனம்**
உங்களது குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்குவர். வரவு திருப்திகரமாக இருக்கும். சுபச்செலவுகள் ஏற்படும். தொட்டது துலங்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

*தமிழகத்தில் மின் தடை*

# பிறர் மீது பழி போடாமல் உடன் நடவடிக்கை எடுங்கள்

## ஓ.பி.எஸ் அறிவுரை

சென்னை ஏப்.08

தமிழகத்தில் மின் தடை ஏற்படாமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டுமே தவிர, அதை விடுத்து பிறர் மீது பழி போடு வதோ அல்லது அதற்கான காரணத்தைக் கூறு வதோ கண்டனத்திற்குரியது என ஓ.பன்னீர்ச்செல்வம் கூறியுள்ளார்.

எனவே முதலமைச்சர் இதில் தனிக்கவனம் செலுத்தி மின் தடை ஏற்படாமல் அனைவருக்கும் தங்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க வழிவகை செய் வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள் ளார்.



# விவசாயிகளுக்கு பாதிப்பின்றி தொழிற்பூங்காக்களுக்கு நிலம்

சென்னை ஏப்.08

விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாமல், தொழிற்பூங்காக்களுக்கு நிலம் எடுக்கப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித் தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திருவள்ளூர் எம்.எல்.ஏ வி.ஜி.ராஜேந் திரன், சூலூர் எம்.எல்.ஏ வி.பி.கந்தசாமி ஆகியோர் தொழில் பூங்கா தொடர்பாக கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றும் போது,

தொழில் வளர்ச்சிக்கு தொழிற் பூங்காக்கள் அமைக்க வேண்டியது அவசியம். இவ்வாறு தொழிற் பூங்கா அமைக்கும்போது, நிலம் கையிருப்பு, போக்குவரத்து, மின்சாரம், தண்ணீர் வசதிகள் மற்றும் தொழில் மனைகள் ஆகிய வற்றைக்கருத்தில் கொண்டு பூங்காக் களுக்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்படும்.

திருவள்ளூர் மாவட்டம் தொழில் வளர்ச்சி கொண்ட மாவட்டம். இங்கு சிப்காட் மூலம் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என முதல்வர் அறிவித்திருந்தார். தொழில் பூங்காக்களுக்கு நிலம் அவசியம்.

அதே வேளை, தொழிற்பூங்காக்களை உருவாக்க நிலம் எடுக்கும்போது, விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என் பதிலும் அரசு அக்கறையுடன் உள்ளது. கோவை மட்டு மின்றி, பல்வேறு இடங்களில் நிலம் எடுப்பதில் உள்ள பிரச்சினைகள் அரசின் கவனத்துக்கு வந்துள் ளன. விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்குப் பாதிப் பின்றி நிலம் எடுப்பதற் கான நடவடிக்கைகளை தொழில்துறை மேற் கொள்ளும்-இவ்வாறு அவர் தெரிவித்தார்.(அ)

# ஜப்பானுடனான உறவு சிறப்பானது

## வெளிப்படையாக கூறும் தமிழக முதல்வர்

சென்னை, ஏப்.08

ஜப்பானுடன் நாம் பகிர்ந்து கொள்ளும் நீண்டகால பொருளாதார மற்றும் பண்பாட்டு உறவை நமது அரசு மதிக்கிறது. இது மிகவும் சிறப்பு வாய்ந்தது என தமிழக முதல்வர் ஸ்டா லின் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்தியாவிற்கான ஜப்பான் நாட்டுத் தூதர் சுசுகி சடோஷியை சந்தித்தார். இந்த சந்திப்பு தொடர்பான முதல்வர் ஸ்டாலின் தனது ருவிட்டர் பக்கத்தில் இந்தியாவிற்கான ஜப்பான் தூதரின் ருவிட்டர் பதிவை பகிர்ந் துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

"சுற்றுலா, போக்குவரத்து, உயர்கல்வி மற் றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் போன்ற பிற துறைகளுக்கும் இந்த ஒத்துழைப்பை விரிவு படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# தமிழரின் நினைவுச்சின்னம் மீண்டும் அகழாய்வு

புதுச்சேரி, ஏப். 08

கடல் வாணிபத்தில் தமிழர்கள் கொடி கட்டிப் பறந்தார்கள் என்பதற்கு நினைவுச் சின்னமாக உள்ள அரிக்கமேடு பராமரிப்பின்றி உள்ள சூழலில், மத்திய தொல்லியல்துறை மீண்டும் அங்கே அகழாய்வு செய்ய முடிவு எடுத்துள்ளது.

புதுச்சேரி அரியாங்குப்பம் அருகே இருக்கும் அரிக்கமேடு பகுதி வங்காள விரிகுடா கடலில் இருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கி.மு.200 முதல் கி.பி.200 வரை இங்கு கடல் வாணிபம் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் அகழாய்வு மூலம் கிடைத்துள்ளன. அதிலும், ரோமானிய மன்னன் அகஸ்டஸ் உருவம் பொறித்த நாணயங்கள், மணிகள், சுடுமண் பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டதன் மூலம் இப்பகுதியில் இருந்து ரோமானியர்களுடன் வாணிபம் இடம்பெற்றமை உறுதிப்படுத் தப்பட்டது.

அரிக்கமேடுப் பகுதியில் கிடைத்த சாயத் தொட்டி உறைகிணறு, பிராமி எழுத்து அமைந்த பானை ஓடுஇ யவனக்குடியிருப்பின் சுவர் பகுதி களை ஆராய்ந்து நூல்களும் வெளிநாட்டவரால் வெளியிடப்பட்டன. இவ்விடத்து பெருமையை நாம் தான் பாதுகாக்கவில்லை என சமூக ஆர்வ லர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

தமிழர்கள் கடல் வாணிபத்தில் கொடிகட்டி பறந்தார்கள் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடம் தற்போது திறந்தவெளி மதுக்கூடமாகவே மாறியுள்ளது. மறுபுறமோ மணல் திருட்டு அதிகளவில் நடக்கிறது. வர லாற்று சின்னங்களையும் சிதைத்து மணல் திருட்டு நடக்கிறது. இந்திய தொல்லியல்துறை கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில்கூட சர்வ சாதா ரணமாக மணலை திருடிச் செல்கின்றனர்.

இந்நிலையில் அரிக்கமேட்டின் நிலை தொடர்பாக அரச வட்டாரங்களில் விசாரித்த போது, "புதுச்சேரி மாநிலத்தின் கோரிக்கையை ஏற்று தற்போது மத்திய தொல்லியல் துறை அரிக்கமேட்டினை அகழாய்வு செய்ய முடிவு செய்துள்ளது. இதற்காக இந்தியத்தொல்லியல் ஆய்வகத்திடம் சிறப்பு அனுமதி பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து இங்கு பூர்வாங்கப் பணி களை தொடங்கியுள்ளது. (அ)

## இயேசுவேஆண்டவர்



இறைமகன் இயேசு பல புதுமைகளையும் அருளடையாளங்களையும் செய்து தன்னை இறைமகன் என்று காட்டினார். ஆனால் அவருக்கு ஏற்பட்டதோ எதிர்ப்பு, இருப்பினும் இயேசு பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் தன் பணியைச் செய்துவந்தார். "இதோ இக் குழந்தை இஸ்ராயேல் மக்கள் பலரின் வீழ்ச்சிக்கும்,எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அருளடையாளமாகவும் இருக்கும்" (லூக் 2:34) என்றசிமியோனின் வாக்குசெயற்படத் தொடங்கியது. அவர் தன் சொந்தஊரிலேஎதிர்ப்பு,அவரைக் கல்லால் எறிந்துகொல்லமுற்பட்டது. அவரைக் கேள்விகேட்டு சிக்க வைக்க முயன்றது. அவரைஅவமானப்படுத்தியது. என்று பல எதிர்ப்புக்கள் அவருடையபணிவாழ்விலேஏற்பட்டாலும் இயேசு பின்வாங்கவில்லை. மாறாகஅவர் தம்முடையசிலுவைப் பயணத்தைத்தொடர்ந்துசென்றுகொண்டேயிருந்தார். தம்முடையசாவுநெருங்குவதைஅவர் நன்றுஉணர்ந்துஅதைநோக்கி பயணிப்பதைதான் இன்றையநற்செய்திஎடுத்துக் கூறுகின்றது.

தன்னையேதெய்வத்திருமகன் என்றுஉண்மையைக் கூறியது குற்றமென இயேசு மீது கல்லால் எறிய முயலுகின்றனர். நன்மையே உருவான இறைமகன்,தீமைபுரியாத இறைமகன், மக்களின் குறைகளைத் தீர்த்த இறைமகன் சென்ற இடமெல்லாம் நன்மையேபுரிந்த இறைமகனின் செயல்கள் அனைத்தும் அவரை கடவுளாகவே காட்டுகின்றன.

ஆனால் பரிசேயரின் பிடிவாதம் அவர்களின் அறிவை மழுங்கச் செய்கிறது. அவர்களின் அறியாமையைப் போக்கவே இயேசுமறைநூலில் இருந்தேவிளக்கமளிக்கிறார்.

நாமும் பலதடவைகள் இறைமகனிடம் வரங்களைப் பெறுகின்றோம். ஆனால் அவரைஉண்மையானகடவுள் என்று விசுவசிக்கின்றோமா? இத் தவக்காலத்தில் நாம் பெற்றுக் கொண்டவிசுவாசக் கொடையைப் பாதுகாக்கமுயல்வோம். எமக்காகத் தன்னையேகையளித்த இறை இயேசுவில் நம்பிக்கை கொண்டுஎமதுதுன்பங்களைஏற்றுவாழ்வோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**




# அரசாங்கத்துக்கு எதிராக மன்னாரில் போராட்டம்!

**மன்னார், ஏப். 08**

**தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.**

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமயில் அரசாங்கத்துக்கு எதிராக இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசின் தூர நோக்கற்ற நிதி நிர்வாக முகாமைத்துவத்தால் நாடு பெரும் பொருளாதார பின்னடைவை எதிர் நோக்கிப்பட்டினிச்சாவை நோக்கி நகர்கின்றது.

குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம், எரிவாயு மற்றும் மின்சாரம் இன்றி பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இச் செயலைக் கண்டித்து இந்தக் கண்டன போராட்டம் இடம் பெற்றது.

இந்தப் போராட்டத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள்,உள்ளூட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வளர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "கோட்டபாயவே வெளியேறு", "குடும்ப ஆட்சி வேண்டாம்", "மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை மக்களுக்கே கொடு" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)




## வவுனியா வைத்தியசாலை முன்பாக வைத்தியர்கள் நேற்று போராட்டம்!

*வவுனியா, ஏப். 08*

வவுனியா வைத்தியசாலையின் முன்பாக வைத்தியர்களினால் ஆர்ப்பாட்டம் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று பிற்பகல் 01.00 மணியளவில் வவுனியா வைத்தியசாலை வைத்தியர் விடுதியில் ஆரம்பமானது. வவுனியா வைத்தியசாலைக்கு முனபாகச் சென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மருந்துகள் இல்லை, சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, சுகாதார வசதிகளை இல்லாதொழிக்க வேண்டாம், நோயுற்றவர்களின் உயிர்களை காப்பாற்றுங்கள் போன்ற அரசுக்கெதிரான பல்வேறு கோஷங்ககளை எழுப்பியவாறு, பதாதைகளையும் ஏந்தியவாறு வைத்தியர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். (அ)

## நோர்வேயின் இரண்டு பல்கலைக்கழகங்கள் யாழ்.பல்கலையுடன் முக்கூட்டு உடன்பாடு!

*யாழ்ப்பாணம், ஏப். 08*

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் நோர்வேயின் பேர்கன் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கிடையில் உயர்பட்ட ஆய்வு நடவடிக் கைகளுக்கான முக்கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி , புதன்கிழமை காலை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

HRNCET 2.0 என்று பெயரிடப்பட்டுள்ள புதிய




நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கூட்டு உடன்படிக்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் துணைப் பீடாதிபதி க்றோ அனிற்றா பெணஸ் ப்ளற்றன் மற்றும் பேர்கன் பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் துணை முதல்வர் ஒய் விண்ட் ப்றட்டே ஆகியோரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வில் இலங்கைக்கான நோர்வேஜியத் தூதுவர் ட்ரீனே ஜோரன்லி எஸ்கெடாலும் நிகழ்நிலையில் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் செயற்றிட்ட இணைப்பாளர் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜனும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் செயற்றிட்ட இணைப்பாளர் தயாளன் வேலாயுத பிள்ளை ஆகியோரும் இதன் போது உடனிருந்தனர்.

இந்த நிகழ்வின் போது நோர்வேயில் இருந்து வருகை தந்த இரு பல்கலைக்கழகங்களினதும் விரிவுரையாளர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆய்வு மாணவர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இவ் உடன்படிக்கையின் மூலம் தூய சக்தி தொழில் நுட்பங்களில் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் பல்கலைக்கழகங்களுக்கிடையில் இணைந்த முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் திட்டங்களில் கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

# 119.08 பில்லியன் ரூபாவை அச்சிட்டது மத்திய வங்கி

*கொழும்பு, ஏப். 08*

இலங்கையில் தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடி அதிகரித்துவரும் நிலையில் இலங்கை மத்திய வங்கியால் மற்றொமொரு தொகுதி பெருந்தொகைப் பணம் அச்சிடப்பட்டுள்ளது.

இதற்கமைய மத்திய வங்கி நேற்று முன் தினம் நிதி சந்தையில் 119.08 பில்லியன் ரூபாவை சேர்த்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை நிதிச் சந்தையில் மத்திய வங்கியால் சேர்க்கப்பட்ட மொத்தத் தொகை 432.76 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கும்.

இதன்படி, கடந்த செவ்வாய்க்கிழமை 1,656,691.82 ரூபாவாக இருந்த இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு கையிருப்பு நேற்று முன்தினம் 1,772,497.21 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியினால் உள்ளூர் சந்தையில் நாளாந்தம் புதிய நாணயங்கள் சேர்க்கப்படுவதால் இலங்கையில் பணவீக்கம் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

இந்த சிக்கலால், உலகிலேயே அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 6 ஆவது இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோட்டாவை விரட்டும்வரை நாங்கள் ஓயவேமாட்டோம்!

## திகாம்பரம் எம்.பி. சூளுரை

கொழும்பு, ஏப். 08

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை ஆட்சிக்கு கொண்டுவந்தவர்கள்கூட 'கோ ஹோம் கோட்டா' என இன்று கோஷம் எழுப்புகின்றனர். எனவே, அராஜக ஆட்சியை முன்னெடுக்காமல், ஜனாதிபதி உடன் பதவி விலக வேண்டும்.” - என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தினார்.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருட்கள் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பழனி திகாம்பரம் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும், இந்த அரசும் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். மலையகத்திலும் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்து மீட்டெடுத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களும், இந்த அராஜக ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காக வீதியில் இறங்கிவிட்டனர்.

நாட்டில் எல்லா பகுதிகளிலும் அரச எதிர்ப்பு அலையே வீசுகின்றது. கோட்டாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு பெரும்பாடு பட்டவர்களும், அணிதிரண்டு வாக்களித்தவர்களும், 'கோட்டா வீட்டுக்கு செல்ல வேண்டும்' என்பதை திட்டவட்டமாக இடித்துரைத்து வருகின்றனர். ஆனால் மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் ஜனாதிபதியும், ஆட்சியாளர்களும் அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மக்கள் கொந்தளிப்புக்கு அஞ்சி மலையகத்தில் உள்ள, கொள்ளையற்ற அரசியல்வாதிகள்கூட இன்று அரசுக்கான ஆதரவை வாபஸ்பெற்றுள்ளனர். அவர்கள் மக்கள் பக்கம் நின்று இந்த முடிவை எடுக்கவில்லை. மாறாக அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாளையே அமைச்சு பதவி கிடைத்துவிட்டால், மக்களை படுகுழிக்குள் தள்ளிவிட்டு 'பல்டி' அடித்துவிடுவார்கள். எனவே, இந்த ஜனாதிபதி, அரசு வீடு செல்லும் வரை போராடுங்கள். நாம் உங்களுக்கு துணையாக நிற்போம் - என்றார்.



(அ)

# கப்ரால் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தடை

கொழும்பு ஏப்.08

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவருக்கு தடை விதித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(அ)

எரிபொருள் தட்டுப்பாடு;

# விமான நிலைய ஊழியர்கள் வீட்டில் இருந்தவாறே பணி

கொழும்பு ஏப்.08

கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்களை நேற்று முதல் வீடுகளிலிருந்து பணி புரியுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவை அதிகார சபை அறிவித்துள்ளது.

ஊழியர்களின் போக்குவரத்துக்குத் தேவையான எரிபொருள் இன்மையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் உப தலைவர் ரஜீவ் சூரியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அதனடிப்படையில், அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் விமான நிலையத்திற்குத் தேவையான எரிபொருளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

(அ)

# இந்தியாவுக்கு நன்றி கூறினார் ஜயசூரிய!

கொழும்பு ஏப்.08

பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கைக்கு இந்தியா உதவி வருகிறது. 40 ஆயிரம் டன் டீசலை சமீபத்தில் கப்பல் மூலம் அனுப்பியது. இதேபோல அரிசியும் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தநிலையில் உதவிகளை வழங்கிய இந்திய அரசுக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜயசூரிய நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி அதிருப்தி அளிக்கிறது. இது மாதிரியான சூழ்நிலையில் மக்கள் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

இந்தியாவை எப்போதும் ஒரு அயல் வீட்டாராக உங்களுக்குத் தெரியும். எங்கள் நாட்டுக்கு அடுத்த பெரிய சகோதரர் எங்களுக்கு உதவுகிறார்.

நெருக்கடிக்கு மத்தியில் இருக்கும் எங்களுக்கு உதவும் இந்திய அரசாங்கத்துக்கும்,



பிரதமருக்கும் (மோடி) நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் இந்திய அரசுக்கும், பிரதமருக்கும் நன்றி உள்ளவராக இருக்கிறோம் - என்றார்.

(அ)

# 70 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, ஏப். 08

பொல்ஹேன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 70 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி பேலியகொடை பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரொருவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட தகவலுக்கு அமைய குறித்த வீட்டிலிருந்து 710 கிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, பயணிகளுக்காக இன்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் விசேட பஸ் சேவையினை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு பஸ்தியன் மாவத்தை பிரதான பஸ் மையத்திற்கு மேலதிகமாக கடவத்தை, கடுவலை மற்றும் மாக்கும்புர உள்ளிட்ட மையங்களில் இருந்தும் இந்த விசேட பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இந்த பஸ் சேவைகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ள நிலையில், இரண்டாம் கட்டமானது பயணிகளின் கோரிக்கைக்கு அமைய முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவையான அளவு எரிபொருள் கிடைக்கப்பெறாவிட்டால், புத்தாண்டு பஸ் சேவையினை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்படும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

(அ)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் மருத்துவர்கள், தாதியர் போராட்டம்





வடமராட்சி ஏப் 7

மருத்துவத்துக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு கோரி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மருத்துவர்கள், தாதிகள், துணைமருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் சிற்றூழியர்கள் நேற்று வியாழன் மதியம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் துறைசார் ஊழியர்தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை மேற்கொண்டிருந்தன.

நண்பகல் 12மணிக்கு வைத்தியசாலை நுழைவாயிலான வெளிநோயாளர் பிரிவு வாசலில் ஒன்றுகூடி போராட்டக் காரர்கள் மோசமான நிதி நிர்வாகத்தினால் மனித உயிர்களைப் பலி கொடுக்கப் போகின்றோம் என்று தமிழ், சிங்கள மொழிகளிலான இரு பெரிய பதாதைகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலை மேற்குப் புற வீதிக்குப் புறப்பட்டு அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக மந்திகை சிலையடிச் சந்தியை அடைந்து அங்கிருந்து சாவ கச்சேரி வீதி - வைத்தியசாலை கிழக்குப் புற வீதி வழியாக வைத்தியசாலையை வந்தடைந்தனர்.

கடும் வெயிலுக்கு மத்தியில் கவனயீர்ப்பு ஊர்வலத்தில் சென்றோர். “வைத்தியசாலையில் மருந்து இல்லை”, “மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை”, “மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம்”, “வைத்தியசாலையில் மருந்து இல்லை வீட்டில் உணவில்லை” “இலவச சுகாதாரம் இல்லா தொழிக்கப்படுகிறது” ஆகிய சுலோக அட்டைகளை மும்மொழிகளிலும் தாங்கியவாறும், தமிழிலும் சிங்களத்திலும் கோசங்கள் எழுப்பியிருந்தனர்.

(அ-02)


# இன்று ஆறரை மணி நேர மின்வெட்டு!

கொழும்பு, ஏப். 08

நிலவும் மின் நெருக்கடி காரணமாக, கொழும்பு முன்னுரிமைப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இன்று 6 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளது.

அதன்படி, ஏ முதல் எல் வரையிலான வலயங்களுக்கு காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை 4 மணி நேரமும், மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை 2 மணி நேரம் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

ஜி முதல் எல் வரையிலான வலயங்களுக்கு மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை 4



மணி நேரமும், இரவு 07.30 மணி முதல் இரவு 10 மணி வரை 2 மணி நேரம் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

அத்துடன், கொழும்பு முன்னுரிமைப் பகுதியில் 3 மணித்தியாலம் 30 நிமிடம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (அ)

# நெருக்கடியான நிலைமைக்கு பஸில் ராஜபக்ஷவே காரணம்

## வீரவன்ஸ எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஏப். 08**

**இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான சித்திரைப் புத்தாண்டை இம்முறையே மக்கள் கொண்டாடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் இன்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்றுள்ளது. இன்று எரிபொருள் இன்றி பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

அத்தோடு, பிரதமர் உள்ளிட்ட தற்போதைய அமைச்சரவையை முழுமையாக அகற்றி விட்டு, சர்வ கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்க மொன்றை நிறுவ வேண்டும். மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய அரசாங்க மொன்றே தற்போது அவசியம். நிதியமைச்சராக செயற்பட்ட பெசில் ராஜபக்ஷவின் செயற்பாடுகளே இந்த நிலைமைக்கு பிரதான காரணம், அவரால் மக்கள் நம்பிக்கையை வெல்ல முடியாமல்போயுள்ளது.

இந்த நேரத்தில் முழு நாடும் எம்மை நோக்கியே பார்த்துக் கொண்டிருக்கிறது. எம்மால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியாதா, ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி இந்த பிரச்னைக்கு தீர்வு காணாமல் இருக்கிறார்கள் என்று மக்கள் நினைக்கிறார்கள்.

இந்த நெருக்கடியில் உதை பந்தாட்டம் விளையாட யாரும் நினைக்கவேண்டாம். நாடு மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. நாம் எல்லோரும் ஒன்றுகூடுவோம். நாடு பற்றி சிந்திப்போம், நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவோம். இந்த நேரத்தில் சுயஇலாபத்திற்காக செயற்படாமல், நாட்டுக்காக செயற்படுவோம்-என்றார். (அ)



# ஒரு வருடச் சம்பளத்தை விட்டுக்கொடுத்தார் ஹரீன்

கொழும்பு ஏப்.08

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தன்னுடைய ஒரு வருடத்துக்கான சம்பளத்தை பெற்றுக்கொள்ளாமல் இருக்கத் தீர்மானித்துள்ளார். இதனடிப்படையில் அதற்கான கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய ஹரின் பெர்ணான்டோ, நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு தனது ஒரு வருடத்துக்கான சம்பளத்தை பெறமாட்டேன் என்றும் பாராளுமன்ற உணவகத்தில் உணவு உண்ண மாட்டேன் என்றும் தெரிவித்தார். (அ)

# புத்தாண்டு தினத்தில் மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஏப். 08

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தில் மின்வெட்டை அமுல் படுத்தாதிருக்க எதிர்பார்க்கின்றோம் - என்று பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், அடுத்த வாரம் முதல் மின்வெட்டு அமுலாகும் நேரத்தை குறைக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்திய கடன் உதவி திட்டத்தின்கீழ் டீசல் கிடைக்கப்பெறவுள்ளது எனவும் அவர் கூறினார். (அ)

# மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் ஐந்து வயது சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 08

பின்னவல-நெல்லிவல பிரதேசத்தில் மரமொன்றின் கிளை முறிந்து வீழ்ந்ததில் பலத்த காயமடைந்த 5 வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லிவல பிரதேசத்தில் உள்ள முன்பள்ளியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒத்திகைகளில் கலந்துகொண்டுவிட்டு தனது தாயுடன் நடைபயணமாக வீடு திரும்பும்போதே குறித்த சிறுமி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சியில் விவசாயிகள் நேற்று கவனயீர்ப்புப் பேரணி!

கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் நேற்று கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த போராட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது.

இதன்போது சிறுபோக செய்கைக்கு கடந்த காலங்களை போன்றல்லாது இம்முறை நீர் வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டமையை கண்டித்தும், சிறுபோகச் செய்கைக்கான நீரை முழுமையாக வழங்குமாறு தெரிவித்தும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது விவசாயிகளால் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

அந்த மகஜரில் இரணைமடுக் குளத்தில் 34 அடி 8 அங்குலம் நீர் இருக்கும் நிலையில் 15,750 ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தும்,6 ஏக்கர் தொடக்கம் 25 ஏக்கர் வரை காணிகள் உடைய விவசாயிகளுக்கு 4 ஏக்கர் செய்கை வழங்கப்படும் எனவும் தீர்மானித்துள்ளமை வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு 10 ஏக்கர் காணி உள்ளவர்களுக்கு 5 ஏக்கர் செய்கை மேற்கொள்ளவும், 15 ஏக்கர் வரை காணி உள்ளவர்களுக்கு 6 ஏக்கர் செய்கை மேற்கொள்ளவும், 20 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு 8 ஏக்கர் செய்கை மேற்கொள்ளவும், 25 ஏக்கருக்கு மேற்பட்ட காணி உள்ளவர்களுக்கு 50 வீதம் எனவும் நீர்ப்பாசனம் வழங்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த காலங்களைப்போன்று தமக்கு நீர்ப்பாசனம் வழங்கும்படி தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது,

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியதுடன், விவசாயிகளால் வழங்கப்பட்ட மகஜரையும் அர சாங்க அதிபர் பெற்றுக்கொண்டார்.

இது தொடர்பில் அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் குறிப்பிடுகையில்-

இவ்விடயம் சிறுபாக செய்கை தொடர்பான முன்னேற்பாடு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் மீண்டும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும். அதில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே இடம்பெற்ற கலந்துரையாடலில் எவ்வித எதிர்ப்புகளும் காணப்படவில்லை-என்றார். (அ)

# ஒன்றும் தெரியாத பஸில் எம்.பியை எதற்கு நிதி அமைச்சர் ஆக்கினீர்கள்?

## எரான் விக்ரமரத்ன எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஏப். 08

பொருளாதாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் எதுவும் தெரியாவிட்டால், பிரதமருக்கும் எதுவும் தெரியாவிட்டால், ஏன் எதுவுமே தெரியாத பஸில் ராஜபக்ஷவை நிதியமைச்சராக நியமித்தீர்கள் என எரான் விக்ரமரத்ன பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றில் உள்ள ஆளுங்கட்சி எம்.பிக்களில் ஒருவரை நியமிக்காமல் குடும்பத்தில் உள்ள ஒன்றுமே தெரியாத ஒருவரை நிதியமைச்சராக நியமித்த காரணத்தினாலேயே தற்போது இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று கூறியபோது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேசையை தட்டி அந்த விடயத்தை வரவேற்றதாக தெரிவித்த எரான் விக்ரமத்ன எம்.பி, நீங்கள் வரவேற்ற அந்த விடயத்தை இந்த வாரமே பாராளுமன்றில் முன்வைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அவ்வாறு நீங்கள் நிறைவேற்று அதிகார முறைமையை நீக்குவதற்கான யோசனையை முன்வைப்பீர்களானால் அதனை அனைவரும் ஒன்று சேர்ந்து நிறைவேற்றுவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நீங்கள் அவ்வாறு நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கு ஒப்புக்கொண்டால், நாங்கள் நாளையே இந்த நாட்டின் பொருளாதார பிரச்னைக்கு தீர்வு வழங்குவதாக குறிப்பிட்ட அவர், தங்களிடம் முறையான பொருளாதார திட்டம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனூடாக வரிசை யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தாங்கள் தயார் எனவும் எரான் விக்ரமரத்ன எம்.பி குறிப்பிட்டார். (அ)

# ரூபாவின் பெறுமதி மீண்டும் கடும் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 08

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று 319.99 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல், அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 309.38 ரூபாவாக பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 340 ரூபா 59 சதம், விற்பனை பெறுமதி 420 ரூபா 24 சதம். ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 405 ரூபா 43 சதம், விற்பனை பெறுமதி 420 ரூபா 24 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபா 50 சதம், விற்பனை பெறுமதி விற்பனை பெறுமதி 2 ரூபா 60 சதமாக பதிவாகியுள்ளது. (அ)

ஈழநாடு



# ரஷ்ய விவகாரத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

# முடிவில் தவறில்லை!

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அண்மையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பாராட்டிப் பேசியது பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. "குவாட்" நாற்கரக் கூட்டணியில் இருந்தபோதும், அமெரிக்காவுக்கு எதிராக இந்தியாவால் ரஷ்ய விவகாரத்தில் நடுநிலையாகச் செயல்பட முடிகிறது. சர்வதேசப் பொருளாதாரத் தடைகளை மீறி, ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்கிறது - என்றெல்லாம் இந்திய அரசியல்வாதிகள் வெளிப்படையாகச் சொல்லத் தயங்கும் உண்மைகளை இம்ரான் கான் தெரிவித் திருக்கிறார்.

ரஷ்யாவிடமிருந்தான இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி அளவு மொத்த எண்ணெய் இறக்குமதியில் இப்போதைக்கு சுமார் ஒரு சதவீதம் மட்டுமே. ஆனால், மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப இந்தியாவும் தனது வர்த்தகக் கொள்கையை இந்திய நலனை மையப்படுத்தி வடிவமைக்க முற்பட்டி ருக்கிறது. அதன் தொடர்ச்சியாக, வரும் வாரங்களில் சுமார் 15 மில்லியன் (150 லட்சம்) பீப்பாய் கச்சா எண்ணெய்யை ரஷ் யாவிடமிருந்து இறக்குமதி செய்ய இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு எதிராக உலக நாடுகள் பலவும் பொருளாதாரத் தடை விதித்துள்ள சூழலில்தான் இந்த இறக்குமதி நடைபெற உள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டிய செய்தி. அதுமட்டுமல்ல, இதற்காக சலுகை விலையில் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வழங்கவும் ரஷ்யா முன்வந்துள்ளது.

இந்த வாய்ப்பு இந்தியாவின் நடுநிலைக் கொள்கையால் கிடைத்ததாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை இந்தியா ஆதரிக்க வில்லை என்றபோதிலும், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நேட்டோ நாடுகள் திணித்த ரஷ்யாவுக்கு எதிரான நிலைப் பாட்டை இந்தியா ஏற்கவில்லை. ஐ.நா. சபையில் ரஷ்யாவுக்கு எதிராக நேட்டோ நாடுகள் கொண்டு வந்த தீர்மானங்களுக்கு ஆதரவோ எதிர்ப்போ தெரிவிக்காமல் நடுநிலை வகித்து, வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்தது. அதேசமயம், உக்ரை னுக்கு ஆதரவாக ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதினிடம் பேசவும் பிரதமர் மோடி தயங்க வில்லை.

> இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் பேசிய அமெரிக்க வர்த்தகத் துறை அமைச்சர் ஜினா ராய்மேண்டோ, ரஷ்யாவும் இந்தியாவும் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் டாலரைப் புறக் கணித்து ரூபாய்- ரூபிள் செலாவணி மாற்றத்தைப் பயன்படுத்திவிடக் கூடாது என்று எச்சரித்தார். இது ஒருவகை ஏகாதிபத்தியமே எனில் மிகையல்ல.

மேலும், உலகின் நான்காவது பொரு ளாதார சக்தியாக வளர்ந்துவரும் இந்தி யாவைப் புறக் கணிக் கவோ எதிர்க் கவோ பிற நாடுகள் தயங்கும் நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவேதான், "இந்தியா ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது சர்வதேச பொருளாதாரத் தடையை மீறும் செயலல்ல" என்று சமாதானம் கூறி இருக்கிறார், அமெரிக்க அதிபரின் சர்வதேச பொருளாதார விவகாரங்களுக்கான தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் தலீப் சிங்.

இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 84 சதவீதம் இறக்குமதி வாயிலாகவே நிறைவு



செய்யப்படுகிறது. 2020- 21 நிதியாண்டில் சுமார் 11 பில்லியன் டாலர் மதிப்புள்ள 239 மில்லியன் டன் கச்சா எண்ணெய்யை பல நாடுகளிடமிருந்து இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது. உலக அளவில் 42 நாடுகளிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்கினா லும், வளைகுடா நாடுகள், ஆப் பிரிக்க நாடுகள், தென் அமெரிக்க நாடுகளிலிருந்து மட்டும் சுமார் 80 சதவீதம் இறக்குமதி நடைபெறுகிறது.

குறிப்பாக, ஈராக், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளின் பங்களிப்பு இதில் மிகுதி. இந்தப் பட்டியலில் ரஷ்யா இதுவரை முக்கிய இடம் வகித்ததில்லை. இந்நிலை தற்போது மாறத் தொடங்கி இருக்கிறது.

இப்போதைக்கு இந்தியாவைப் பகைத்துக் கொள்ள அமெரிக்கா தயாராக இல்லை என்றாலும், ரஷ்யாவுடனான இந்திய வர்த் தகத்தை அந்நாடு பதற்றத்துடன்தான் பார்க்கிறது. தற்போது உலக வர்த்தகத்தில் பொதுச் செலாவணியாக உள்ள அமெரிக்க டாலருக்கு மாற்றாக பிற நாட்டு நாணயங்கள் உருவாகிவிடக் கூடாது என்பதே அந்நாட்டின் தற்போதைய கவலை.

இதுகுறித்து அண்மையில் இந்திய வெளி யுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் பேசிய அமெரிக்க வர்த்தகத் துறை அமைச்சர் ஜினா ராய்மேண்டோ, ரஷ்யாவும் இந்தியாவும் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் டாலரைப் புறக்கணித்து ரூபாய்- ரூபிள் செலாவணி மாற்றத்தைப் பயன்படுத்திவிடக் கூடாது என்று எச்சரித்தார். இது ஒருவகை ஏகாதிபத்தியமே எனில் மிகையல்ல.

ஆனால், இப்போது காலச்சூழல் அமெ ரிக்காவுக்கு சாதகமாக இல்லை. சென்ற ஆண்டு ஆப்கானிஸ்தானில் தலிபான்களிடம் ஆட்சியை ஒப்படைத்துப் பின்வாங்கிய போதே அந்நாடு தனது பலவீனத்தை ஒப்புக் கொண்டது. இப்போது அமெரிக்காவையும் நேட்டோ நாடுகளையும் நம்பி முஷ்டி உயர்த் திய உக்ரைன் நாடு ரஷ்யத் தாக்குதலில் நிலை குலைந்து போயிருக்கிறது. வெற்று மிரட்டல் களுடன் அமெரிக்கா வேடிக்கை பார்க்கிறது.

அதுமட்டுமல்ல, ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கக் காரணமான அமெரிக்காவே, அந்நாட் டிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை 43 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இத்தகவலை, ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் துணைச் செயலாளர் மிகயில் போபோவ் அம்பலப்படுத்தி இருக்கிறார். தினசரி ஒரு லட்சம் பீப்பாய் கச்சா எண் ணெய்யை ரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்யும் அமெரிக்கா, பிற நாடுகள் ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யக் கூடாது என்று மிரட்டுவது ஒரு நகைமுரண்.

மாறி வரும் புவி அரசியல் சூழலில், வேகமான மாற்றங்களை உலகப் பொருளாதாரம் சந்தித்து வரும் வேளையில், தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய செயல்முறையே ஒவ்வொரு நாட்டுக்கும் தேவை. அந்த வகையில் நட்பு நாடுகளின் நிர்ப்பந்தத்துக்குப் பலியாகாமல், உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல், நடுநிலை பேணுவது இந்தியாவின் பலம் மட்டுமல்ல, நலமும் கூட. ■



# இலங்கை போராட்டப் பகுதியில் மர்ம மோட்டார் பைக்குகள்: ஆயுதம் ஏந்தி வந்த நபர்கள் யார்?

ரஞ்சன் அருண்பிரசாத்

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியால் அங்கு தொடர்ச்சியாக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டம் நடத்திய பகுதியில், முகத்தை மறைத்து, ஆயுதம் ஏந்திய நபர்கள், மோட்டார் பைக்கில் சென்றது விவாதப் பொருளாகியுள்ளது.

இலங்கை நாடாளுமன்றம் நேற்றுமுன் தினம் கூடிய வேளையில், நாடாளுமன்ற நுழைவாயில் வளாகத்தை அண்மித்த பகுதிகளில் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவி விலக கோரியே இந்த போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

இதன்போது குறித்த பகுதியில் கடும் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

## திடீரென வந்த மோட்டார் பைக்குகள்

இவ்வாறான நிலையில், திடீரென இலக்கத் தகடுகள் அற்ற, ஆயுதம் ஏந்தி, முகங்களை முகக்கவசத்தினால் மூடியவாறு 4 மோட்டார் சைக்கிள்கள் போராட்டம் நடத்தப்பட்ட பகுதிக்கு வருகைத் தந்த நிலையில், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இவ்வாறு போராட்டம் நடத்தப்பட்ட இடத்திற்கு வருகைத் தந்த மோட்டார் சைக்கிள்களினால், போராட்டக்காரர்கள் மத்தியில் அமைதியின்மை நிலவியது.

இதையடுத்து, பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள், மோட்டார் சைக்கிளில் வருகைத் தந்தவர்களை மறித்து கேள்வி எழுப்ப முயற்சித்த போது, மோட்டார் சைக்கிளில் வருகைத் தந்தவர்கள் பொலிஸாரின் ஆணையை பொருட்படுத்தாது, பயணித்திருந்தனர்.

இந்த நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் ஒன்று திரண்டிருந்த போராட்டக்காரர்கள் மத்தியில் அமைதியின்மை நிலவியது.



## ராணுவம் விசாரணைக்கு கோரிக்கை

ராணுவத் தலைமையக பணிப்பாளர் நடவடிக்கைகளின் வழிகாட்டலுக்கு அமையவே, நான்கு பேர் அடங்கிய ராணுவ ரைடர்ஸ் குழுவொன்று நாடாளுமன்ற வளாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக ராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவிக்கின்றார்.

இதன்போது, ஒழுக்கமற்ற விதத்தில் பொலிஸ் அதிகாரிகள் செயற்பட்டுள்ளதாகவும், அவ்வாறு செயற்பட்ட 2 பொலீஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறும் ராணுவத் தளபதி, பொலீஸ் மாஅதிபரிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

பொலீஸ் உத்தியோகத்தர்களின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை குறித்து விசாரணைகளை நடத்துமாறு பொலீஸ் மாஅதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளதாக ராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## பொலிஸாரின் பதில்

நாடாளுமன்ற வளாகத்தில் ராணுவத்திற்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் குறித்து பொலிஸ் மாஅதிபரின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

இதன்படி, குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபர் சுயாதீன விசாரணைகளை நடத்துவதாகவும் பொலிஸ் தலைமையகம் கூறுகின்றது.

## எதிர்கட்சி கேள்வி?

மோட்டார் சைக்கிள்களில் வருகைத் தந்தவர்கள் யார் என்பது குறித்து அறிந்துக்கொள்ள வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபையில் கேள்வி எழுப்பினார்.

இலக்கத் தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள்கள், முகக் கவசம் அணிந்தவர்கள், இவர்கள் வேறொரு குழுவா? இரகசிய இராணுவமா? இதற்கான பதிலை நாங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

நாட்டின் சட்டம் மற்றும் அமைதியை பேணுவதற்கான பொறுப்பு பொலிஸார் வசம் காணப்படுவதாக கூறிய அவர், அதனாலேயே பொலிஸார் கேள்வி எழுப்பியதாகவும் குறிப்பிட்டார்.

## நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பின் பதில்

மோட்டார் சைக்கிள்களின் இருபுறங்களிலும் இலக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததாக ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவிக்கின்றார்.

தான் இராணுவ தளபதியுடன் கலந்துரையாடியதாகவும், அவர் இதனை உறுதிப்படுத் தியதாகவும் அவர் கூறுகிறார்.

எனினும், இன்றைய தினம் குறித்த மோட்டார் சைக்கிள்களில் முன்புறமும், பின்புறமும் இலக்கத்தகடுகளை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவ தளபதி உறுதியளித்ததாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

கோவிட் காலப் பகுதியிலும் இந்த மோட்டார் சைக்கிள்கள் வீதிகளில் பயன்படுத்தப்பட்டதாகவும் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, சபையில் குறிப்பிட்டார்.

## இலங்கையில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்படும் - சபாநாயகர்

இதனிடையே, இலங்கையில் எதிர்காலத்தில் கடுமையான உணவு பஞ்சம் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றமை குறித்து அனுமானிக்க முடிவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவிக்கின்றார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று (06) கலந்துக்கொண்டு விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை வரலாற்றில் என்றுமே இல்லாத வாறான பொருளாதார நெருக்கடி ஆரம்பமாகியுள்ள சூழ்நிலையிலேயே, இன்று நாட்டின் அசாதாரண சூழ்நிலை குறித்து விவாதிக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது, எதிர்காலத்தில் மேலும் உக்கிரமடையும் சாத்தியம் காணப்படுவதாக பொருளியல் நிபுணர்களை மேற்கோள்காட்டி அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

நாட்டில் இன்று எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சார தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு மேலாக சென்று, கடுமையான உணவு பஞ்சம் எதிர்காலத்தில் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அனுமானிக்க முடிகின்றது என அவர் கூறுகின்றார்.

நாடாளுமன்றத்தில் தாம் செயற்படும் விதத்திலேயே இதனை கட்டுப்படுத்த முடியும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

கடந்த சில தினங்களாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், அதனால் அவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிடுகின்றார்.

இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தான் போலீஸ் மாஅதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் கூறுகின்றார்.

## ஜனநாயக வரைவுக்குள் தீர்வு

மக்கள் எதிர்நோக்கியுள்ள நியாயமான கஷ்டங்களினாலேயே, தம்மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதை தாம் உணர்ந்துக்கொள்ள முடிவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

தாம் தலைமைத்துவம் வகிக்கும் மக்களுக்கு தற்போது பொருளாதார அழுத்தத்தை உணர்ந்துக்கொள்ள முடிவதாக கூறிய அவர், அதனால், இந்த விடயத்தை நன்கு புரிந்துக்கொண்டு செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் திட்டத்தின் மூலம் வெற்றிக்கொள்ள முடியும் என்பதை வரலாற்றில் முன்னெடுத்த திட்டங்களின் ஊடாக உணர்ந்துக்கொள்ள முடியும் என தான் நம்புவதாகவும் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவிக்கின்றார்.



எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஜனநாயக வரைவுக்குள் தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் தான் நம்புவதாக அவர் கூறுகின்றார்.

மேலும், அது வெற்றியளிக்காதபட்சத்தில், அது நாடாளுமன்ற ஜனநாயகம் வெற்றியளிக்காத விடயமாக கருதப்படும் என அவர் தெரிவிக்கின்றார்.

நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களில் முடிவடையும் என மஹிந்த யாப்பா அபேவர்தன கூறுகின்றார்.

நாடாளுமன்ற ஜனநாயகம் தோல்வி அடைந்தமையினால், ஆயிரக்கணக்கான உயிர்களை கடந்த காலங்களில் இழக்க வேண்டிய நிலைமை தனது அனுபவத்தில் இரு முறைகளில் கண்டுக்கொள்ள முடிந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.


அதனால், தோல்வி அடையாத வகையில் செயற்பட வேண்டும் என தான் நம்புவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவிக்கின்றார்.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

❖ **கீழே தரப்பட்டுள்ள 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள உருவின் மிகப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

01.




02.



❖ **தரப்பட்டுள்ள இரண்டு உருக்களினை நன்கு அவதானித்து உரு A க்கும் உரு B க்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எத்தனை?**


03.



A B

1) 2 2) 4 3) 3

04. கீழே தரப்பட்டுள்ள கூட்டத்தினுள் உள்ளடங்கக் கூடிய உருவைத் தெரிவு செய்க.



05. தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் வேறுபட்டுள்ளது. அச் சொல்லைத் தெரிவு செய்க.
அம்புலி , நிலா , சந்திரன் , இந்திரன் , மதி

1) அம்புலி 2) சந்திரன் 3) இந்திரன்

06. இங்கு தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் இரண்டு சொற்கள் ஒரு கூட்டமாகவும், மூன்று சொற்கள் ஒரு கூட்டமாகவும் அமைக்கும்போது ஒரு சொல் வேறுபட்டு இருக்கும். அச் சொல்லைத் தெரிவு செய்க.

திங்கள் , பங்குனி , வைகாசி , சனி , செவ்வாய் , யுரேனஸ்


1) திங்கள் 2) பங்குனி 3) சனி

07. | A | C | E | → | B | D | F | எனின்

| i | iii | v | → | | | | இடைவெளிக்குப் பொருத்தமானது.

1) | ii | iv | v | 2) | ii | iv | vii | 3) | ii | iv | vi |

09. பின்வரும் கணிதச் செய்கையினை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





1) 25 2) 5 3) 6


10. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?
சுயமான ஒளி இல்லை
புவியதை வலம் வருவான்
மாதத்தில் ஒருமுறை மாயமாவான்
தண்மையான ஒளிதனை தரணிக்களிப்பான்.

1) நட்சத்திரம் 2) திங்கள் 3) பூமி


11.





என்னும் தரவுகளைக் கொண்டு பிரசினத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




12.



இங்கு ஊடுருவு தாளில் இரண்டு படங்கள் வரையப் பட்டுள்ளன. ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்ட பின்னர் தெரியும் உருவைத் தெரிவு செய்க.




13. 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை எனின் அம் மாதத்தின் திங்கட்கிழமைகள் எத்தனை?
1) 5 2) 4 3) 3

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 5. 3 | 9. 1 | 13. 2 |
| 2. 1 | 6. 1 | 10. 2 | |
| 3. 2 | 7. 3 | 11. 1 | |
| 4. 2 | 8. 2 | 12. 3 | |

கல்வி tv CHANNEL-1

**08.04.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**08.04.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |





# கோட்டாபய அரசுக்கு எதிராக நேற்று தலவாக்கலையில் ஆர்ப்பாட்ட பேரணி

கொழும்பு, ஏப். 08

"கோட்டா வீட்டுக்குப் போ" என்ற கோஷத்தோடு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்பாடு செய்திருந்த மாபெரும் எதிர்ப்புப் பேரணி தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்றது.

எதிர்ப்புக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக பூண்டுலோயா வழியாகவும், நுவரெலியா வழியாகவும், ஹற்றன் வழியாகவும் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் தங்களுடைய எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் தலவாக்கலை நகரை வந்தடைந்தனர். அங்கு பிரதான சுற்று வட்டத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போது அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதா கிருஷ்ணன், பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார், எம்.வேலு குமார் ஆகியோருடன் கூட்டம் நடை பெற்ற பிரதான விளையாட்டு மைதானத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றடைந்தனர்.

தொடர்ந்து பிரதான மேடைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ வந்தடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகியது. மக்கள் முன்னிலையில் சஜித் அங்கு உரையாற்றினார். (அ)

## பனை அபிவிருத்திச் சபையினரால் முல்லைத்தீவில் சைக்கிள் வழங்கல்

முல்லைத்தீவு, ஏப். 08

பனை அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார உதவித் திட்டம் 2021இன் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கள் மற்றும் பதநீர் உற்பத்தியாளர்களுக்கான சைக்கிள்கள் நேற்றுக் காலை 9.00மணிக்கு மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 08 சங்கங்களை உள்ளடக்கியதாக 137 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக இணைப்பாளர் பனை அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், குறித்த சங்கங்களின் அங்கத்தவர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்!

மன்னார், ஏப். 08

மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் நீதிமன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணிகள் மன்னார் நீதிமன்றத்தின் முன் ஒன்று கூடி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது "கவிழ்ப்போம் கவிழ்ப்போம் குடும்ப ஆட்சியை கவிழ்ப்போம்", அப்பாவி மக்களின் வாழ்க்கையை சீரழித்தது போதும் ஓடிவிடு கோட்டா,போலி முகம் காட்டும் கோட்ட அரசு எமக்கு வேண்டாம் உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு மன்னார் சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



## கைதான 12 இந்திய மீனவர்களுக்கு தலா 2 கோடி ரூபா காசுப் பிணை!

கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 23ம் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும் தலா இரண்டு கோடி ரூபா காசு பிணையில் செல்லுமாறு நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. எல்லைதாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 23ஆம் திகதி இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் நான்கு இந்திய மீனவர்களும் கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் 12 இந்திய மீனவர்களும் என 16 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதில் கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்துக்கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுடன் கைது செய்த கடற்படையினர் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைத்ததையடுத்து குறித்த 12 இந்திய மீனவர்களும் கடந்த 24ஆம் திகதி மாலை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ் லெனின் குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மேற்படி 12 இந்திய மீனவர்கள் தொடர்பிலான வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் பி.ஆர் ஸ்மாத் ஜெமில் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த மீனவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து 12 இந்திய மீனவர்களையும் தலா இரண்டு கோடி ரூபா பெறுமதியான காசுப் பிணையில் செல்லுமாறு மன்று கட்டளை இட்டதுடன் எதிர்வரும் மே மாதம் 12 ஆம் வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (அ)

## நெருக்கடிக்கான தீர்வுகள் குறித்து பாராளுமன்றில் பேசுவோர் குறைவு

### சபாநாயகர் கவலை

கொழும்பு, ஏப். 08

தற்போதைய நெருக்கடிக்கான தீர்வுகள் குறித்து பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் பேசவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று அதிருப்தி வெளியிட்டார்.

நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கான யோசனைகள் மற்றும் தீர்வுகள் குறித்து பாராளுமன்றில் உறுப்பினர்கள் விவாதிப்பது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. இது துரதிர்ஷ்டவசமானது என்று சபாநாயகர் கூறினார்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பது அல்லது சபையை இடைநிறுத்துவது போன்ற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்து எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களில் பெரிதும் வெளிக்கொணரப் படாவிட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாசிறி ஜயசேகர மற்றும் விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட சிலரின் கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. அவை அவையின் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை என சபாநாயகர் கூறினார்.

கட்சி வேறுபாடின்றி இந்த நெருக்கடியை சமாளிக்க பாராளுமன்றம் உடனடியாக ஒரு பொதுவான வேலைத்திட்டத்தை வகுக்கவேண்டும் என இரண்டு எம்.பி.க்களும் வலியுறுத்தியதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், நேற்று முன்தினம் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் வழமை போன்று அரசியல் நெருக்கடி குறித்த பிரச்சினையையே சபையில் அதிகம் எழுப்பியமை வருத்தமளிக்கிறது எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான கொள்கைத்திட்டம் ஒன்றை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து வகுக்க வேண்டும் எனவும் சபாநாயகர் கோரினார். (அ)

# சீனாவில் மீண்டும் கொரோனா பரவல்

## ஒரே நாளில் 20,000 பேருக்கு தொற்று



பீஜிங், ஏப்.08

சீனாவின் முக்கிய நிதி மையமான ஷங்காயில் நேற்று முன்தினம் புதன் கிழமை 19ஆயிரத்து 660 புதிய அறிகுறியற்ற கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளும் 322 அறிகுறிகளுடன் கூடிய தொற்று நோயாளிகளும் உறுதிப்படுத்தப்பட்டதாக நகர அரச நிர்வாகம் நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அறிகுறியற்ற தொற்று நோயாளர்கள் எண்ணிக்கை 16ஆயிரத்து766ஆகவும் அறிகுறிகளுடன் கூடிய தொற்றாளர் எண்ணிக்கை 311 ஆகவும் பதிவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஷங்காய் நகரை அச்சுறுத்தும் மிகப்பெரிய கொவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்த ஏதுவாக நகரம் முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. நகரில் உள்ள 26 மில்லியன் மக்களையும் கொவிட் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு சீனா அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு உதவும் வகையில் இராணுவம் மற்றும் ஆயிரக்கணக்கான சுகாதாரப் பணியாளர்கள் ஷங்காய்க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளர். இது சீனாவின் மிகப்பெரிய பொதுச்சுகாதார முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. (அ)

# இந்தியாவில் பரவியதா எக்ஸ்.ஈ கொரோனா திரிபு?

## மாறுபட்ட தகவல்களால் குழப்பம்!





புதுடில்லி, ஏப்.08

இந்தியாவில் கொரோனா வைரஸின் புதிய எக்ஸ்.இ (XE) திரிவு பரவியுள்ளதாக நேற்று செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் தற்போது இது எக்ஸ்.இ திரிபல்ல என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் புதிய திரிபான எக்ஸ்.இ மும்பையில் நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டதாக செய்தி வெளியாகியிருந்தது. இந்தியாவில் முதல்முறையாக மும்பையில் ஒருவருக்கு இந்த திரிபு ஏற்பட்டதாக மும்பை மாநகராட்சி கூறியது.

இந்நிலையில் தற்போது உள்ள ஆதாரங்களின் அடிப்படையில், அது எக்ஸ்.ஈ திரிபு என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எக்ஸ்.ஈ திரிபு என்று கூறப்பட்ட இந்த திரிபால் பாதிக்கப்பட்டதாக கூறப்பட்ட நோயாளி குறித்து ஆராய்ந்த "இன்சாகாக்" என்ற கொரோனா வல்லுநர்க் குழு கண்டறியப்பட்ட திரிபின் மரபணு உள்ளடக்கம் எக்ஸ்.ஈ திரிபின் மர பணுத் தோற்றத்தை ஒத்திருக்கவில்லை என்று கூறியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒமைக்ரோனை விட வேகமாகப் பரவக் கூடிய புதிய வகை கொரோனா உருத் திரிவு வைரஸ் பிரிட்டனில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

ஒமைக்ரோன் திரிபுகளான பிஏ.1 மற்றும் பிஏ.2 ஆகியவற்றின் பிறழ்வு தான் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட எக்ஸ்.ஈ வகை கொரோனாவாகும்.

ஒரே நேரத்தில் குறிப்பிட்ட நபர் பல்வேறு கொரோனா திரிபுகளால் பாதிக்கப்படும்போது புதிய வகை உருவாகிறது. திரிபுகள் சேர்க்கையின்போது மரபியல் சார்ந்த கூறுகள் கலந்து புதிய வகை கொரோனா உருவாவதாக பிரிட்டன் நிபுணர்கள் தங்களின் ஆய்வு கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

ஒமைக்ரோன் வகையின் துணை திரிபான பிஏ.2-ஐ விட புதிதாக உருவாகியுள்ள எக்ஸ்இ கொரோனா திரிபு 10 விகிதம் அதி வேகமாக பரவலாம் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், இது குறித்து மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி எக்ஸ்இ வகை கொரோனா முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இதுநாள் வரை, 637 பேர் புதிய வகை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பிரிட்டன் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# தரையிறக்க கட்டுப்பாட்டில் கோளாறு ஏயார் பிரான்ஸ் விமானம் அருந்தப்பு!

பாரிஸ், ஏப்.08

நியூயோர்க்கில் இருந்து பாரிஸ் வந்த"ஏயார் பிரான்ஸ் "போயிங்" விமானம் ஒன்று பாரிஸ் விமான நிலையத்தில் தரையிறங்கிய சமயத்தில் ஏற்படவிருந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

விமானம் தரையிறங்கும் சமயம் அதன்தரையிறக்கக் கட்டுப்பாடு செயலிழந்த தாக ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் ஜோன் எப் கென்னடி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு நேற்று முன் தினம் காலை பாரிஸ் றுவாஸி விமான நிலையத்தில் இறங்கிய "போயிங் 777" விமானமே பெரும் விபத்தில் இருந்து தப்பியிருக்கிறது. பொதுவாக விமானங்கள் தரையிறங்கும் சமயத்தில் ஏற்படுகின்ற கோளாறுகளின் போது விபத்துக்கான வாய்ப்புகள் அதிகம்.

விமானிகளுக்கும் கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் இடையிலான உரையாடல்களில் விமானி பதற்றமடைந்து பேசிய வீடியோக் காட்சி "யூரியூப்" தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. கடல் மட்டத்தில் இருந்து ஆயிரத்து 200 அடி உயரத்தில் பறக்கையில் அதன் தரையி றங்கும் தொழிற்பாடு கட்டுப்பாட்டை இழந்ததில் விமானம் இறங்கவேண்டிய திசைக்கு எதிராக இடப்பக்கமாகத் திரும்பியுள்ளது. விமானி தனது மிகையான முயற்சியால் விமானத்தை அது ஏனைய விமானங்களுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக விமான நிலையத்தின் மறு பக்கத்தில் உள்ள மற்றொரு ஓடு பாதையில் அவசரகட்டத்தரையிறக்கத்தை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக புலனாய்வு மற்றும் சிவில் விமானப் பாதுகாப்புப் பகுப்பாய்வுப் பணியகம் விசாரணைகளைத் தொடக்கியுள்ளது.

ஏயார் பிரான்ஸ் நிறுவனத்தின் இந்த போயிங் விமானம் 17 ஆண்டுகளுக்கு முன்பு சேவையில் சேர்க்கப்பட்டது என்றும் அது போன்ற விமானங்களுக்குப் பதிலாக தற்சமயம் "ஏயார் பஸ்-350" ரக விமானங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஒமைக்ரோனுக்கு எதிரான தடுப்பூசி கண்டுபிடித்தனர் ஆஸ்திரிய விஞ்ஞானிகள்!

லண்டன், ஏப். 08

ஒமைக்ரோன் உள்ளிட்ட சார்ஸ்-கோவ்-2 வகைகளுக்கு (SARS-CoV-2 variants) எதிரான புதிய தடுப்பூசியை ஆஸ்திரியா நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஏற்கனவே தடுப்பூசி போட்டு நோய் எதிர்ப்புச்சக்தி பெறாதவர்களுக்கும் இந்த தடுப்பூசி பலன் அளிக்கும் இதனை உருவாக்கிய வியன்னா மருத்துவ பல்கலைக் கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தடுப்பூசி, ஆர்.பி.டி. என்று அழைக்கப் படுகிற வைரசின் ஏற்பி பிணைப்பு கலங்களை (The Receptor Binding Domains - RBD) குறிவைக்கிறது. விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் இந்த தடுப்பூசியை செலுத்தி பரிசோதித்ததில் இது நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குவது தெரிய வந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்த நோய் எதிர்ப்புச்சக்தியானது உடல்



செல்களுக்குள் வைரஸை நுழைய விடாமல் தடுக்கிறது. இதனால் தொற்று ஏற்படாது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். போதுமான நிதி கிடைத்தால், ஒப்புதலுக்கு தேவையான முதல் மருத்துவ பரிசோதனைகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னணி மருத்துவ இதழான அலர்ஜியில் (Allergy) வெளியிடப்பட்ட ஆய்வு முடிவுகள் ஏற்கனவே வேறு தடுப்பூசிகளை போட்டுக் கொண்டு நோய் எதிர்ப்பு சக்தியை பெறாதவர்களுக்கும் இந்தத் தடுப்பூசி பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கிறது.

ஒமைக்ரோன் உட்பட இன்று வரை அறியப்பட்ட அனைத்து சார்ஸ்-கோவ்-2 வகைகளுக்கும் எதிராக எளிதில் உற்பத்தி செய்யக்கூடிய புரத அடிப்படையிலான தடுப்பூசி நோயெதிர்ப்பு திறன் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புவதற்கு எங்கள் தரவுகள் ஆதாரமாக உள்ளன என வியன்னா மருத்துவ பல்கலைக் கழகத்தின் நோயியல் இயற்பியல், தொற்றுநோயியல் மையத்தைச் சேர்ந்த ஆய்வுத் தலைவர் ருடால்ப் வாலென்டா (Rudolf Valenta) கூறினார். (அ)

# சென்னை அணியின் 'ஆர்ஆர்ஆர்' வீரர்கள்

## அணி நிர்வாகம் பகிர்ந்த வைரல் புகைப்படம்




ஐபிஎல் தொடரின் 15ஆவது சீசன் கடந்த மாதம் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்று வரும் போட்டியில் டில்லி - லக்னோ அணிகள் மோதி வருகின்றன.

அதே நேரத்தில் தொடரின் நடப்பு சாம்பியன்களான சென்னை அணி தாங்கள் விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்விடைந்து புள்ளி பட்டியலில் 8ஆவது இடத்தில் உள்ளது. அதே போல் 5 முறை சாம்பியன்களான மும்பை அணியும் இந்த முறை 3 தோல்விகளை சந்தித்து திணறிவருகிறது.

சென்னை அணி தங்கள் அடுத்த போட்டியில் ஐதராபாத் அணியுடன் இன்று மறுநாள் பலப்பரீட்சை நடத்துகிறது . இந்த போட்டியில் வெற்றி பெறும் முனைப்பில் சென்னை அணி வீரர்கள் தீவிர பயிற்சயில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ராபின் உத்தப்பா , ருதுராஜ் மற்றும் ராயுடு ஆகியோர் பயிற்சி மேற்கொள்ளும் புகைப்படங்களை சென்னை அணி தங்கள் ருவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

குறிப்பாக சமீபத்தில் வெளியாகி உலகம் முழுவதும் பெரும் வரவேற்பை பெற்ற "ஆர்ஆர்ஆர்" திரைப்படத்தை குறிப்பிட்டு ராபின், ருதுராஜ், ராயுடு (முதல் எழுத்து ஆர் ) ஆகியோரின் புகைப்படங்களை அணி நிர்வாகம் பகிர்ந்துள்ளது.

# "டோனி எப்படி அதை செய்தார் என புரிந்துகொள்ள முடியவில்லை"

## இஷான் கிஷன் குழப்பம்



ஐபிஎல் தொடரில் 5 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ள மும்பை இந்தியன்ஸ் அணி 2016 ஆம் ஆண்டு இஷான் கிஷனை ஏலத்தில் எடுத்தது. ஆரம்ப காலங்களில் அவருக்கு அணியில் விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை.

2020 ஆம் ஆண்டு தான் அவர் 516 ரன்கள் விளாசி ஐபிஎல் தொடரில் உச்சம் தொட்டார். அதன் பின்னர் மும்பை அணியின் முக்கிய வீரராக இஷான் கிஷன் தற்போது விளங்குகிறார். இனிவரும் நாட்களில் இந்திய அணியின் முக்கிய அங்கமாக அவர் இருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இந்த நிலையில் அவர் தற்போது முன்னாள் இந்திய அணியின் கேப்டன் டோனி தனக்கு ஏற்படுத்திய மறக்கமுடியாத சம்பவம் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார்.

இது தொடர்பாக இஷான் கிஷன் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறுகையில், " எம்.எஸ். டோனியின் கீப்பிங் திறமையை விட, நான் அவரது மூளை எப்படி இயங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஒரு போட்டியில், நான் நன்றாக விளையாடி கொண்டிருந்தேன். அனைத்து பவுலர்களையும் நன்றாக எதிர்கொண்டு ரன்களை அடித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது டோனி, பந்துவீச வந்த இம்ரான் தாஹிரிடம் சென்று பேசினார். அவர் என்ன பேசினார் என்று யோசிக்கும்போது எனக்கு இன்னுமும் ஆச்சரியமாக இருக்கிறது

இம்ரான் தாஹிர், எனக்கு ஒரு ஹாப்- வாலி பந்தை வீசினார். நான் அதை டிரைவ் அடிக்க முயன்ற போது, ஷார்ட் தியேர்ட் மேன்யிடம் கேட்ச் கொடுத்து அவுட் ஆனேன்.

ஒரு ஸ்பின்னரை டிரைவ் செய்ய முயலும் பேட்ஸ்மேன் எப்படி ஷார்ட் தியேர்ட் மேன்யிடம் சிக்கினார் என்பதை இன்னுமும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதை தோனி சரியாக கணித்தார்" என தெரிவித்தார்.



# பெட் கம்மின்ஸ் அதிரடி: மும்பை அணியை பந்தாடியது கொல்கத்தா அணி!

ஐ.பி.எல். ரி-20 தொடரின் 14ஆவது லீக் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

புனே மைதானத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 161 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சூர்யகுமார் யாதவ் 52 ஓட்டங்களையும் திலக் வர்மா ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், பெட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 162 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 16 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பெட் கம்மின்ஸ் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சில், டைமல் மில்ஸ் மற்றும் முருகன் அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டேனியல் சேம்ஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 15 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த பெட் கம்மின்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# முதல் போட்டியிலே டெவால்ட் பிரிவிஸ் அடித்த 'நோ லுக் சிக்சர்' - வைரல் வீடியோ



ஐபிஎல் தொடரில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் மும்பை மற்றும் கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 161 ரன்கள் எடுத்தது. 162 ரன்கள் இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி தொடக்கத்தில் தடுமாறினாலும் பின்னர் கம்மின்ஸ் அதிரடியால் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் மும்பை அணிக்காக முதல் போட்டியில் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் டெவால்ட் பிரிவிஸ் அதிரடியாக விளையாடி 19 பந்துகளில் 29 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

சமீபத்தில் நடந்துமுடிந்த 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் உலகக்கோப்பை தொடரில் அதிக ரன்கள் அடித்தவர் என்ற பெருமையை பெற்ற இவர் கிரிக்கெட் உலகின் அடுத்த ஏபி டி வில்லியர்ஸ் என ரசிகர்களால் அழைக்கப்படுகிறார்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் கொல்கத்தா பந்துவீச்சாளர் வருண் சக்கரவர்த்தி வீசிய 8-வது ஓவரின் முதல் பந்திலே டெவால்ட் பிரிவிஸ் இமாலய சிக்சர் ஒன்றை விளாசினார். பந்தை அடித்த அவர் அது எங்கே செல்கிறது என பார்க்கவில்லை. கிரிக்கெட் அரங்கில் இது 'நோ லுக் சிக்சர' என அழைக்கப்படுகிறது.

அவரின் இந்த 'நோ லுக் சிக்சர்' தற்போது சமூக வலைத் தளங்களில் அதிகமாக பரவி வருகிறது.

# மக்களுக்குத் தீர்வை வழங்க முன்னின்று செயல்படுவோம்

## ஜீவன் தொண்டமான் பகிரங்க அழைப்பு

கொழும்பு, ஏப்.08

ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி விளையாடும் கலா சாரத்தை முதலில் நிறுத்தவேண் டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்ட மான் கேட்டுக்கொண்டார்.

மற்றவர்கள் மீது குற்றச் சாட்டுகளை முன்வைப்பதற்கு பதிலாக நாட்டின் தற்போதைய பிரச்னை குறித்து பேசித் தீர்வு காண வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அபிவிருத்தி அரசியலால் எவ்விதப்பயனும் இல்லை கொள்கை அரசியலை செயற் படுத்தி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்



கடியான காலநிலையில் மக்க ளுக்கு தீர்வை வழங்க அனை வரும் முன்னின்று செயல்பட வேண்டும் என்றும், ஜனநாயக ரீதியில் வன்முறை யில் ஈடு படாமல் போராட்டத்தில் ஈடு பட்டால் தாம் ஆதரவளிப் போம் என்றும் அவர் குறிப் பிட்டார். (அ)

# தமிழர் விரோத யுத்தமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 08

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு நாட்டை ஆட்சி செய்தவர்க ளின் தவறான சிந்தனையும், ஆக்கபூர்வத் திட்டங்கள் இன்றி தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டதுமே காரணமாகும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலை வர் சுரேஷ் க.பிறேமச் சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் இன்றைய நிலை குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கை இன்று மோச மான பொருளாதார நெருக் கடிக்குள் தள்ளப்பட்டிருப்ப தானது வெறுமனே கடந்த இரண்டு வருடங்களாக நிலவி வரும் கோவிட்-19 மற்றும் ரஷ்ய-உக்ரைன் சண்டையி னால் மாத்திரமல்ல. ஜே.ஆர். ஜெயவர்த்தன காலம்தொட்டு மகிந்தராஜபக்ச காலம்வரை யில், பல்லாயிரம் கோடி ரூபாயினை பல்வேறுபட்ட நாடுகளிடமிருந்து அழிவு யுத்தத்திற்காக இவர்களால் பெறப்பட்ட கடன்களினால் ஏற்பட்டதாகும்.

சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு, தமிழ் மக்களை அடக் குதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, ஆக்கபூர்வ நடவடிக் கைகளில் ஈடுபடாமல், மக்களை அழிப்பதற்கும் அவர்களின் அசையும், அசையா சொத்து களை அழிப்பதற்காகவும் எமது சகோதர இனமான சிங்கள இனத்தை தவறாக வழிநடத்தி, பெறப்பட்ட கடன்களே இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமாகும்.-என குறிப் பிட்டுள்ளார். (அ)

# அரசாங்கத்துடன் சுதந்திரக்கட்சி புரிந்துணர்வுடன் செயற்படும்!

கொழும்பு, ஏப்.08

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு அமைவாக பாரா ளுமன்றத்தில் ஏற்படும் பிரச் னைகளின்போது அரசாங்கத் துடன் புரிந்துணர்வுடன் செயற்படுவதாக ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி உறுதியளித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலைமை தொடர்பில் கட்சியின் நிலைப் பாட்டை தெளிவுபடுத்துவதற் காக இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் ஸ்ரீ பால டி சில்வா இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்க ளுடன் ஏதேனும் பிரச்னை ஏற்படும் பட்சத்தில், அது தொடர்பில் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ளுமாறும், சொத் துக்களுக்கும் உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களி டம் கேட்டுக்கொண் டார். (அ)

# அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கினார் தௌபீக் எம்.பி.

கொழும்பு, ஏப். 08

அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக்கொண்டுள்ளார் திரு கோணமலை மாவட்ட பாரா ளுமன்று உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்.

இது குறித்து அவர் தெரிவிக் கையில்-

அரசாங்கத்தினால் பாராளு மன்றத்திற்கு கொண்டுவரப் பட்ட பிரேரணைகளில் கீழ் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம், பஸில் ராஜபக்ஷவால் கொண்டுவரப்பட்ட நிதி சம்மந் தப்பட்ட ஒரு பிரேரணை, 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றா வது வாசிப்பின் வாக்கெடுப்பு போன்றவைகளுக்கு மாத்திரம் தான் நான் ஆதரவை வழங்கி யிருந்தேன். ஆனால் இனிவரும் காலங்களில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படுகின்ற எந்த பிரேரணைக்கும் ஆதரவாக வாக்களிப்பதில்லை என்று தீர் மானித்துள்ளேன். எனது கட்சியின் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்) தீர்மானத்திற்கு கட்டுப்பட்டதுடன் நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலையேற் றம், எரிபொருள் இல்லாமை, எரிவாயு இல்லாமை, மருந்து கள் தட்டுப்பாடு, அத்தியாவசிப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் பல கார ணங்களுக்காக இத்தீர்மா னத்தினை எடுத்துள் ளேன்-என்றார். (அ)

# நாடு முழுக்க போராட்டம் வடக்கில் காணி அபகரிப்பு

## சபையில் சுட்டிக்காட்டினார் சிறிதரன்

கொழும்பு, ஏப். 08

வடக்கில் அனலைதீவிலும் முல்லைத்தீவிலும் நில அள வையில் ஈடுபட்டு நில அபக ரிப்பு செய்யும் இராணுவத் தினரின் நடவடிக்கை தொடர் பாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தது.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்த நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போதே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் ஸ்ரீதரன் இதனை சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் மக்களும்



இளைஞர்களும் அரசாங்கத்துக் கும் ஜனாதிபதிக்கும் எதிராக போராடிக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான தரு ணத்தில் இவ்வாறான செயற் பாடுகள் இடம்பெறுவதாக அவர் குற்றம் சாட்டினார். (அ)

### உலகில் மிகவும் பலவீனமான நாணயமாக இலங்கை ரூபா!

கொழும்பு, ஏப். 08

இலங்கை ரூபா உலகின் மிக வும் பலவீனமான செயல்திறன் கொண்ட நாணயமாக மாறியுள் ளதாக பினான்சியல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் இது வரையில் இலங்கை ரூபாயே மிகவும் வீழ்ச்சியடைந்த நாண யமாக இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 32 வீதத்தால் வீழ்ச்சி யடைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டளவில், உலகின் பலவீனமான நாணயப் பாவனையில் இலங்கை முதலி டத்தில் உள்ளது.

இந்த பட்டியலில் கானா, எகிப்து, ரஷ்யா மற்றும் தஜி கிஸ்தான் ஆகியவையும் முன்னி லையில் உள்ளன. (அ)

# மோ. சைக்கிள் மரத்துடன் மோதி 22 வயது இளைஞன் உயிரிழப்பு!

## மற்றொருவர் படுகாயம் யாழ். துணைவி பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 08

வட்டுக்கோட்டை, துணைவி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் இன்னொரு வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

நவாலியில் உள்ள உறவின ரின் வீட்டுக்கு பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்று விட்டு தங்களது வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த இளை ஞர்களது மோட்டார் சைக்கிள் துணைவி வீதியில் உள்ள மரத்துடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளை ஞன் உயிரிழந்துள்ளதுடன் பின்னால் இருந்த இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

அராலி - செட்டியார் மடம் பகுதியைச் சேர்ந்த புலேசாந் என்ற 22 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது சடலம் பிரேத பரிசோ தனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பதவி விலகிய அமைச்சர்கள் பலர் வாகனங்களை ஒப்படைக்கவில்லை

கொழும்பு, ஏப். 08

அண்மையில் பதவி விலகிய அமைச்சர்கள் தமது உத்தியோ கபூர்வ வாகனங்களை மீள ஒப் படைக்கவில்லை என தெரிவிக் கப்படுகிறது.

நாடு முழுவதும் ஏற்பட்ட போராட்டங்கள் மற்றும் நெருக்கடிகளையடுத்து, கடந்த 3 ஆம் திகதி அமைச்சரவை பதவி விலகியது.

பின்னர், சில அமைச்சுப் பத விகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டி ருந்த நிலையில் வெற்றிடமாக இருந்த நிதியமைச்சர் பதவிக்கு முன்னாள் நீதிய மைச்சர் அலி சப்ரி நியமிக்கப் பட்டார்.

எனினும், அலி சப்ரி 24 மணித்தியாலங்களுக்குள் அப் பதவியிலிருந்து விலகியதை யடுத்து, புதிய நிதியமைச்சராக பந்துல குணவர்தன பதவியேற் பாரெனத் தெரிவிக்கப்பட்டு கிறது.

எவ்வாறாயினும் பதவி வில கிய அமைச்சர்கள் இதுவரை தங்களது உத்தியோகபூர்வ வாக னங்களை ஒப்படைக்கவில்லை என நம்பத்தகுந்த வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.


## வியுக்தியார் பதில்கள்



வாராவாரம் உங்கள் கேள்விகளுக்கு வியுக்தியார் பதிலளிக்கவிருக்கிறார். அது அரசியல், சமூகம், சமயம் என்று எந்த துறையில் உங்களுக்கு சந்தேகம்இருந்தாலும் கேள்விகளை அனுப்புங்கள். வியுக்தியார் தனக்கே உரிய பாணியில் பதில் தருவார்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

வியுக்தியார் பதில்கள்,
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## ஜனாதிபதி...

“தாம் நினைத்தால் பதவி விலகும் ஏற்பாடு ஜனாதிபதிக்கு உள்ளது. இது தொடர்பில் சபாநாயகருக்கு கடிதம் அனுப்பிவிட்டு அதனை அவர் செய்யலாம்.

புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் வரை, பிரதமர் ஜனாதிபதியாக செயற்படலாம்.

ஆனால் மஹிந்த இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவியை வகித்துவிட்டார். எனவே, சிக்கல் நிலை ஏற்பட்டால் அடுத்த வாய்ப்பு சபாநாயகருக்கு உள்ளது. ” என்றும் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார். (அ)

## மத்திய வங்கிக்கு...

அவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய நேற்று மாலை வழங்கினார்.

இதேவேளை, நிதி அமைச்சின் புதிய செயலாளராக மஹிந்த சிறிவர்தன ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாராளுமன்றம்...

பதியின் வருகையை ஒட்டி பாராளுமன்றத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாராளுமன்றம் செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டு அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபட்டனர். (அ)

## கொதிக்கின்றது...

பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பொது நிதியை முறைகேடாக நிர்வகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் தலைமைத்துவத்தை மாற்றுமாறு இந்த மக்கள் போராட்டங்கள் கோருகின்றன.

இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை நியூசிலாந்து அரசாங்கம் கண்டிக்க வேண்டும் என்று கோரி நியூசிலாந்து வாழ் இலங்கையர்கள் மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்-என்றார்.

இலங்கையின் தலைமையை கண்டிக்கின்றீர்களா? என்று கேட்கப்பட்டபோது, ஆர்டெர்ன் சிறிது நேரம் உரையை நிறுத்தினார்.

ஆனால் இலங்கை மக்களிடையே வளர்ந்து வரும் விரக்தியை ஒப்புக்கொண்டார்.

இலங்கையில் இது மிகவும் கொந்தளிப்பான காலக்கட்டம் என்று அவர் கூறினார். (அ)

## ஆசிய - பசுபிக்...

மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளும் ஒக்கஸ் உடன்பாட்டை அறிவித்தன. இதனடிப்படையில் அவுஸ்திரேலியாவுக்கு அனுவாயுத நீர்முழ்கியொன்றை வழங்குவது தொடர்பிலும் பேசப்பட்டது.

இதனை சீனா கடுமையாக ஆட்சேபித்திருந்தது. இந்த பின்னணியில் கடந்த செவ்வாய்க்கிழமை, அமெரிக்க, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்கள், கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை எதிர்க்கும், எதிர் - ஏவுகணைகள் மற்றும் மின்னியல் யுத்த ஆற்றலை விரிவுபடுத்துவது தொடர்பில் இணைந்து பணியாற்றவுள்ளதாக அறிவித்திருக்கின்றனர். அத்துடன், மூன்று நாடுகளுக்கிடையிலும், பாதுகாப்பு விடயங்களில் புத்தாக்கத்தை பகிர்ந்து கொள்ளவுள்ளதாகவும் அறிவித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தை கண்டித்திருக்கும் சீன வெளிவிவகார அமைச்சு, அமெரிக்கா ஆசிய - பசுபிக் நேட்டோவை உருவாக்கி வருவதாகவும் குற்றம் சாட்டியிருக்கின்றது. இது அடிப்படையில் அமெரிக்க மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான நோக்கத்தை கொண்டதென்றும் இதனை ஆசிய - பசுபிக் நாடுகள் நிராகரிக்க வேண்டுமென்றும் சீனா வலியுறுத்தியின்றது. (அ)

# கொடுத்த கடனை வாங்கச் சென்றவர் கொலை செய்து புதைக்கப்பட்டாரா?

## யாழ். பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழில் பெண்ணொருவர் படுகொலை செய்து புதைக்கப்பட்டுள்ளார் என்று சந்தேக நபர்கள் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் , பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் கடந்த முதலாம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் பணம் கொடுக்கலில் ஈடுபட்டு வருபவர் எனவும், குடும்பம் ஒன்றுக்கு கொடுத்த 3 இலட்ச ரூபா பணம் வாங்க சென்றபோதே காணாமல் போயிருந்தார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதன் அடிப்படையில், மணியந்தோட்டம் பகுதியில் குறித்த பெண்ணிடம் பணம் வாங்கிய குடும்பத்தினரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி இருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், பணம் வாங்கிய குடும்பத்தினர், அப்பெண்ணை கொலை செய்து, அவர்களது வீட்டுக்கு பின்னால் புதைத்துள்ளதாகவும், அவரது மோட்டார் சைக்கிளையும் புதைத்துள்ளனர் எனும் சந்தேகந்தில் குறித்த பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்றில் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, குறித்த வீட்டில் வசித்து வந்த கணவன் மனைவி மற்றும் அவர்களுக்கு உதவிய குற்றத்தில் ஒருவருமாக மூவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## ஜனாதிபதி பதவி...

தாம் தயா ரில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

2001 இல் நெருக்கடி ஏற்பட்ட போதும், தேர்தல் நடத்தப்படும்வரை ஜே.வி.பி. அரசுக்கு நேசக் கரம் நீட்டியிருந்தது என்ப தையும் அநுர நினைவு கூறினார்.

அதேவேளை, மக்கள் போராட்டங்களை, வன்முறையாக மாற்றவேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

## நானும்...

சுயாதீன நபர்போலவே செயற்படுகின்றேன். வியத்மக பெயில் என்ற தகவலை முதலில் வெளியிட்டேன். ஞானசார தேரரின் நியமனத்தை கண்டித்தேன். அதனால் மூன்றாம் வரிசைக்கு தள்ளப்பட்டேன். இன்றைய உரையுடன் என்னை இன்னும் பின்னிலைப்படுத்தலாம். பரவாயில்லை. நான் மக்கள் பக்கம்தான் நிற்பேன்.” - என்றும் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (அ)

## பஸிலிடம் இருந்து...

எழுச்சி பெறும் இளைஞர் படைக்கு முகம் கொடுக்கும் வகையில் பொதுஜன பெரமுன கட்சியை முற்றாக மறுசீரமைக்கும் பணி நாமல் ராஜபக்ஷவுக்கு உள்ளது.

இடைக்கால அரசில் எந்தப் பதவியையும் ஏற்கப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ள இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறையின் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அடுத்த சில மாதங்களுக்குள் பொதுஜன பெரமுன கட்சியை மறுசீரமைக்க உள்ளதாக பிரதமர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ச இருந்த போதிலும், அவருக்கு இதுவரை எந்தப் பொறுப்பும் வழங்கப்படவில்லை. அதே போன்று நாமல் ராஜபக்ஷவுக்கு இதுவரை எந்த பதவியும் பொறுப்பும் வழங்கப்படவில்லை. என்பதுடன் அந்தக் கட்சி முழுமையாக பஸில் ராஜபக்ஷவுக்கு சொந்தமான தனியார் நிறுவனமாகவே செயற்பட்டு வந்தது.

ஏறக்குறைய அனைத்து பொதுஜன பெரமுன கட்சி பொறுப்பாளர்களும் பஸில் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் ஆவர். அரச தலைவருக்குக்கூட கட்சியில் எந்தவொரு பதவியும் வழங்கப்படவில்லை.

நாடாளாவிய ரீதியில் பஸில் எதிர்ப்பு அதிகரித்து உள்ள நிலையில், பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைப் பொறுப்பை நாமல் ராஜபக்ஷவிடம் வழங்க ராஜபக்ஷ குடும்பத்தினர் தீர்மானித்துள்ளதுடன், அவர் நேற்று வியாழக்கிழமை காலை நெலும் மாவத்தையில் அமைந்து உள்ள பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்துக்கு சென்று பணிகளை தொடங்கி உள்ளார்.

நாமல் ராஜபக்ஷ உடனடியாக கட்சித் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களை அழைத்து தற்போது நிலவும் நெருக்கடியை சமாளிக்கும் முகமாக கட்சியை மறுசீரமைக்க தொடங்கி உள்ளார் என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# பதவியில் அமர்த்தியவர்களே இன்று வீதியில் இறங்கி துரத்தும் கேவலம்!

## ரிஷாத் எம்.பி. சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 08

நாட்டின் ஜனாதிபதியை வீட்டுக்குப் போகுமாறு கோரி, பாமரர்களும், படித்தவர்களும் சிறுவர்களும் பெரியோரும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளமை, இந்த நாட்டின் துரதிஷ்டமாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்று இந்த நாடு மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பாதைகளிலே சிறுவர்கள் முதல் பெரியோர் வரை, படித்தவர் முதல் படிக்காதவர் வரை எல்லோருமே “கோட்ட கோ ஹோம்” என்ற கோஷங்களுடன் திரிகின்ற மிகவும் இழிவான நிலை இந்த நாட்டுக்கு வந்துள்ளது. நமது நாட்டில் எத்தனையோ ஜனாதிபதிகள் பதவி வகித்தனர்.

ஆனால், அதற்கு மாற்றமாக எந்தவொரு ஜனாதிபதியும் அவமானப்படாத நிலை தற்போதைய ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இவருக்குப் பைத்தியம் என்று கூறுகின்றனர். இவ்வாறான நிலை ஏற்பட்ட பிறகும், இந்த சபையிலே ஒரு சில அமைச்சர்கள் “நாங்கள் ஒருபோதும் விலகப் போவதில்லை, ஜனாதிபதியையும் விலக அனுமதிக்கமாட்டோம், அவர் விலகவும் மாட்டார், எதற்கும் முகங்கொடுக்கத் தயாராக உள்ளோம்” என பேசுகின்றனர்.

அவர் நாட்டின் தலைமைக்குத் தகுதி இல்லாதவர் எனத் தேர்தலுக்கு முன்னரே நாங்கள் உணர்ந்துகொண்டவர்கள். அதனாலேயே நாம் அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்தோம். எனினும், அவருக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. நாடாளுமன்றத் தேர்தலிலும் அவரது கட்சி வெற்றியீட்டியது. இவ்வாறு வாக்களித்தவர்கள்தான், இன்று நடு வீதிகளிலும் சந்திகளிலும் அவருக்கும், அவரது அரசுக்கும் எதிராகக் கோஷமிடுகின்றனர்.

அமெரிக்கா, லொஸ் ஏஞ்சல்சிலே உள்ள அவரது மகனின் வீட்டுக்கு முன்னாள் சென்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்கின்றவர்கள் என்ன மடையர்களா? அல்லது சஜித்தின் ஆதரவாளர்களா? அல்லது அநுரவின் ஆதரவாளர்களா? அல்லது சுமந்திரனின் ஆதரவாளர்களா? என்று சிந்திக்க வேண்டும்.

இவர்களின் கோஷத்தை மதித்து, இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் இந்த சபையில் வந்து விதண்டாவாதம் பேசுவது முட்டாள்தனம் மட்டுமல்ல, ஆபத்தையும் கொண்டுவரும். நாட்டுக்குப் பேரழிவையும் ஏற்படுத்தும். இரண்டு வருடகாலம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதைச் சிந்தியுங்கள்.

பதவிக்கு வந்து அவசர அவசரமாக, 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தீர்கள். பாராளுமன்ற அதிகாரத்தைப் பறித்துத் தனி நபர்களிடம் ஒப்படைத்தீர்கள். “முஸ்லிம் கட்சிகள் கூடாது, முஸ்லிம் வாக்குகள் கூடாது” எனக் கூறிய நீங்கள், எதிரணியில் வெற்றிபெற்ற முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேரைக் கொண்டு 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றினீர்கள்.

அதன்மூலம் கிடைத்த இலாபம் என்ன? பிரதமருக்கு இருந்த அதிகாரத்தை, அவரது தம்பி கோட்டாவுக்கு வழங்கினீர்கள். இவ்வாறான அதிகாரம் தனிநபருக்குச் சென்றிருக்காவிட்டால், இன்று ஏற்பட்டுள்ள பிரச்னையைப் பாராளுமன்றம் பொறுப்பேற்றிருக்க முடியும்.

பிரதமர் பொறுப்புக் கூறும் நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, நீங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட இந்த 20ஆவது திருத்தம்தான் இந்தப் பிரச்சினையின் மூல வேராகும். இந்த இரண்டு வருடங்களிலும் நாட்டின் பொருளாதார நிலை பற்றிச் சிந்தித்திருக்கின்றீர்களா? கடன் சுமை, மக்களின் பொருளாதார பிரச்சினை தொடர்பில் ஏதாவது திட்டங்கள் தீட்டினீர்களா? இதற்கெல்லாம் கோவிட்டைக் காரணம் காட்ட முடியாது. கோவிட் பிரச்னை உலகில் எல்லா நாடுகளையும்தான் ஆக்கிரமித்தது.

ஆனால், மற்றைய நாடுகள் இவ்வாறு தடுமாறவில்லை. எதற்கெடுத்தாலும் வரிசையில் நிற்கும் நிலை எந்த நாட்டிலும் ஏற்படவில்லை. ஜனாதிபதியின் முதலாவது உரையிலே இனவாதம் பேசினார். இரண்டாவது உரையிலே, மண்மலை எல்லாவற்றையும் மீட்டுவிட்டோம் என்றார்.

யாரிடமிருந்து இவற்றை மீட்டீர்கள்? முஸ்லிம்கள் காலகாலமாக பராமரித்து வந்த உரிமைகளைப் பறித்து எடுத்தீர்கள். உங்கள் அதிகாரத்தை வைத்து, அவற்றைக் கபளீகரம் செய்துவிட்டு, வீராப்புடனும் மமதையுடனும் பேசினீர்கள்.

இதனால் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்ததா? கடன் சுமைகள் அடைக்கப்பட்டதா? பெரும்பான்மை சிங்கள மக்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக இவ்வாறு பேசினீர்கள்.

இந்த இரண்டு வருடகாலம் இந்த நாட்டை குட்டிச்சுவராக்கியதை ஜனாதிபதி இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும். -என்றார். (அ)

## அரசியல்...

குழப்பம் ஏற்படுத்தியமை தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அதிருப்தி வெளியிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# நிறைவேற்று அதிகாரம் விரைவில் அகற்றப்படும்

## சஜித் பிரேமதாஸ உறுதி



**கொழும்பு, ஏப். 08**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருட்கள் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்குரோத்தடைந்த சில அரசியல்வாதிகள், தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்காக மீண்டும் இனவாதத்தையும், மதவாதத்தையும் கையில் எடுத்துள்ளனர். இனம் மதம், அரசியல் பேதங்களை மறந்துதான் மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். எனினும், மக்களின் போராட்டத்துக்கு முத்திரை குத்தப்படுகின்றது. எனவே, இனவாதத்தையும், மதவாதத்தையும் தோற்றுவிப்பவர்களை, தோற்கடிப்பதற்காக நாம் அறவழியில் எழுந்து நிற்போம்.

இது எமது நாடு, நாட்டு வளங்களை, சொத்துகளை காக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே, தேசிய சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காத வகையிலேயே போராட்டங்கள் இடம்பெற வேண்டும். ஒழுக்கம் உள்ள மக்கள் என்ற வகையில் போராட்டத்தில் பங்கேற்பவர்கள் அதனை பின்பற்றுகின்றனர் என உறுதியாக நம்புகின்றேன்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள், சிறு தோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள். பயிரிடப்படாத நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும். சிறு தேயிலை தோட்டங்கள் அதிகரிக்கும் பட்சத்தில், ஏற்றுமதி அதிகரிக்கும், ஏற்றுமதி அவ்வாறு அதிகரித்தால் வருமானம் கூடும். அந்த வழிமுறையை நாம் கையாள்வோம். அதேபோல லயன் யுகத்துக்கும் முடிவு கட்டப்படும். மலையக மக்களின் எழுச்சிக்காக தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்து காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற யோசனையை நாம் முன்வைத்துள்ளோம். தனி நபரிடம் அதிகாரம் இருக்ககூடாது. சர்வாதிகார ஆட்சியும் வேண்டாம். எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இல்லாதொழிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

# கோதுமை மா விலை உயரும்

*கொழும்பு, ஏப். 08*

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையினை மேலும் 50 ரூபாயினால் அதிகரிப்பதற்கு கோதுமை மா நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ள அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன, தற்போது ஒரு கிலோகிராம் கோதுமை மா 180 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தார்.

அதன் விலை மேலும் 50 ரூபாவினால் அதிகரிக்கப்படுமாயின் மாவின் விலை 200 ரூபாயைவிட உயரும் என்பதுடன், தமது தொழிற்துறையினர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 - 09 - 1936 | மறைவு 05 - 04 - 2022

### திருமதி மேரி ஞானவதனம் அக்குறூஸ்

(ஜோசப் டீச்சர்)
இளைப்பாறிய கணித பாட ஆசிரியை
வசாவிளான் மத்திய கல்லூரி

யாழ். வசாவிளான் ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மேரி ஞானவதனம் அக்குறூஸ் அவர்கள் 05-04-2022 செவ்வாய்க் கிழமை அன்று யாழில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து ஜோசப் - செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும்,ஜோசப் சந்திரசேகரம் அவர்களின் சகோதரியும், மரியம்மா சந்திரசேகரம் (கனடா) அவர்களின் மைத்துனியும், ஸ்டீபன்(ஐக்கிய அமெரிக்கா), சந்திரன்(ஐக்கிய அமெரிக்கா), அருள்(கனடா), மதி(கனடா), ஆனந்தி(ஐக்கிய அமெரிக்கா), சுகந்தி(கனடா) ஆகியோரின் மாமியாரும், அனுஷா, றெஜினி, அனிற்றா, பிறேமா, யூலியஸ், செல்ரன் ஆகியோரின் மாமியும்,பிரமிகா, பிரஜித், அஞ்சலி, ஷாமிலி, சியாம், நிலா, நினா, கவி, ரிஷி, நேசா, காவ்யா, நேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் உடல் பிரதான வீதியில் அமைந்துள்ள வையிற் கவுஸ் அந்நிய கால சேவை இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் அஞ்சலி செலுத்த விரும்பிய வர்கள் 08-04-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 09:00 மணிமுதல் பி.ப 04:00 மணிவரை அஞ்சலி செலுத்த முடியும்.அன்னாரின் திருவுடல் 10-04-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 09:00 மணியளாவில் இல 243, ஆஸ்ப்பத்திரி வீதியில் அவர் சில காலம் வாழ்ந்த அமரர் அலோசியஸ் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 11-04-2022 திங்கட்கிழமை அன்று மு.ப 08.00 மணியளாவில் இல்லத்தில் இருந்து அவரது சொந்த ஊரான ஒட்டகப்புலம் அமல உற்பவ அன்னை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆலயத்தில் மு.ப 09: 00 மணிமுதல் மு.ப 10: 00 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டும், அதனைத்தொடர்ந்து மு.ப 10:00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் ஒட்டகப்புலம் அமல உற்பவ அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். (பிரயாண வசதிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது).

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**மரியம்மா சந்திரசேகரம்**
**- மைத்துனி** +16132162246
**மரியம்மா சந்திரசேகரம்**
**- மைத்துனி** +94779633037

தகவல் :
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 03 - 1973 | மறைவு 04 - 04 - 2022

### நடராசபிள்ளை வசீகரன்
### (மாணிக்கவாசகம்)

முல்லைத்தீவு கணுக்கேணி முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட நடராசபிள்ளை வசீகரன் அவர்கள் 04.04.2022 திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - நடராசபிள்ளை, ராசம்மா நடராசபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், அப்பாக்குட்டி ஆனந்தம், காலஞ்சென்ற ராசம்மா ஆனந்தம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,சிவமணி (மலர்) அவர்களின் அன்புக் கணவரும்,துகிரி, சானாவி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பிரபாகரன், சித்ரா, உதயகரன்(அவுஸ்திரேலியா), கருணாகரன், அனுரா, திபாகரன்(கனடா), மீரா(இலங்கை), காலஞ்சென்ற மதுரா (லண்டன்), தசரதன்(மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,விக்னேஸ்வரன், காந்தன், கெங்காதரன், பாஸ்கரன், இதயன், வாமதேவன்(இலங்கை), யோகா (லண்டன்), இராசரத்தினம், இந்துமதி, சுதா(அவுஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராசா, தாட்சயினி(கனடா), அரவிந்தன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மங்களேஸ்வரி, கோகிலா, றஜனி, வாசுகி(இலங்கை), பாபு (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 09 Apr 2022 5:00 PM - 9:00 PM
Sunday, 10 Apr 2022 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Sunday, 10 Apr 2022 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 10 Apr 2022 10:30 AM
Highland Hills Funeral Home & Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தனம் - சகோதரன்**
**Mobile : +14168247300**

தகவல்:
**குடும்பத்தினர்**








இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு
**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வருத்தப்படாத வாலிபர் சங்கம்,யான் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவுட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-நுகர்வு பொருட்களின் அதிகரித்த விலையும் திண்டாடும் வாழ்கையும்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்